பக்கங்கள்: 16
விலை:20 ரூபா
காலைக்கதிர்
Kalaikkathir
விடியல் 02 | வள்ளுவர் ஆண்டு 2049 | வைகாசி 30 புதன்கிழமை 13.06.2018 | கதிர் 219

இனிது ரகசியம் அல்ல!

'கேள்விச் செவியன் ஊரைக் கெடுத்தான்' – என்பார்கள். நமது பகுதியில் பல விடயங்கள் இப்படித்தான் கேள்விச் செவியர் போக்கில் கையாளப்படுகின்றன. பல தலைவர்களின் கூற்றுக்கள், பேச்சுக்கள் கூட இப்படி

பக்கம் 03

# சட்ட நிபுணர்களுடன் கோட்டா ஆலோசனை

## அமெ. பிரஜாவுரிமையைத் துறக்கும் சிக்கல் குறித்து



கொழும்பு, ஜூன் 13

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் கூட்டு எதிரணி சார்பில் களமிறங்குவதாயின் தனது அமெரிக்கப் பிரஜாவுரிமையைத் துறக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ, அதில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளை எவ்வாறு கையாள்வது என்பது குறித்து சட்ட நிபுணர்களுடன் மந்திராலோசனை நடத்தி வருகிறார் என்று அறிய வருகின்றது.

பக்கம் 14

## தவராசா கொடுத்த ரூ. 7000 அவரது வீட்டு வாசலுக்குள்!



யாழ்ப்பாணம், ஜூன் 13

வடக்கு மாகாண எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசாவால் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுக்கு வழங்கப்பட்ட 7 ஆயிரம் ரூபா

பக்கம் 14

## வடக்கு அரசின் பதவிக் காலம்; தேர்தல் செயலகத்துக்கு கடிதம்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஜூன் 13

வடக்கு மாகாண சபையின் பதவிக் காலம் தொடர்பில் பல்வேறு விதமான கருத்துக்கள் வெளியாகி வரும் நிலையில் அது குறித்து தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கும் தேர்தல் ஆணையாளருக்கும் மாகாண சபை கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளது.

மாகாண சபையின் அமர்வு கைதடியிலுள்ள பேரவைச் செயலகத்தில் நேற்று இடம்பெற்றபோது

பக்கம் 03

## தனியாக ஆட்சி அமைப்பதற்கு ஐ.தே.க. ஆவல்

கொழும்பு, ஜூன் 13

ஐக்கிய தேசியக் கட்சி தனித்து ஆட்சியமைக்க வேண்டும் என்பதே கட்சியின் பெரும்பாலான வர்களின் எதிர்பார்ப்பாக உள்ளதெனப் பிரதியமைச்

பக்கம் 14

## கொக்கிளாய் கடற்கரையில் இல்மனைட் அகழ முயற்சி

### ரவிகரன் குற்றச்சாட்டு

(எஸ்.நிதர்ஷன்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்கிளாய் கடற்கரையில் இல்மனைட் அகழ்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகச் சுட்டிக்காட்டிய வடக்கு மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், இதனால் ஏற்படப் போகும் அபாயங்கள் குறித்தும் விளக்கி தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும் வலியுறுத்தினார்.

நேற்றைய மாகாண சபை அமர்வில் இது தொடர்பான பிரேரணையை

பக்கம் 03

## வடக்கில் மத்திய அரசின் தேவையற்ற தலையீடுகள்

### வடக்கு கல்வி அமைச்சர் குற்றச்சாட்டு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஜூன் 13

வடக்கு மாகாணத்தில் மத்திய அரசு தேவையற்ற தலையீடுகளை மேற்கொள்கின்றது. குறிப்பாக மாகாண சபையைப் புறந்தள்ளித் தனது திட்டமிட்டச் செயற்பாடுகளை மேற்கொள்ள அது எத்தனிக்கிறது.

இவ்வாறு குற்றம் சாட்டினார் வடக்குக் கல்வி அமைச்சர் கலாநிதி க.சர்வேஸ்வரன்.

வடக்கு மாகாண சபை அமர்வு நேற்று நடந்தது. இதில், மத்திய அரசினால் உருவாக்கப்படும் மீள்குடி

பக்கம் 14

## இந்து கலாசார அமைச்சை உடனே இழுத்து மூடுங்கள்

### மைத்திரி மீது சிவசேனை காட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 13

நாட்டின் இந்து கலாசார அமைச்சின் பிரதி அமைச்சராக காதர் மஸ்தான் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டமைக்குச் சிவசேனை அமைப்பு கடும் கண்டனம் வெளியிட்டுள்ளது.

பக்கம் 03

## இந்து கலாசார, புனர்வாழ்வு பிரதி அமைச்சராக மஸ்தான்



கொழும்பு, ஜூன் 13

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான், வடக்கு அபிவிருத்தி, மீள்குடியேற்றம்,இந்து கலா

பக்கம் 14

## வடக்குக் காணி அமைச்சின் அலுவலகம் கிளிநொச்சியில்

### சபையில் கூறினார் முதல்வர்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஜூன் 13

வடக்கு மாகாணக் காணி அமைச்சின் அலுவலகம் கிளிநொச்சியில் அமைக்கப்பட உள்ளது. இதற்கான பணிகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்பட உள்ளன என வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபை அமர்வு கைதடியிலுள்ள பேரவைச் சபா மண்டபத்தில் சபைத் தலைவர்

பக்கம் 03

## இந்துக்களை மைத்திரிபால கொச்சைப்படுத்திவிட்டார்

### மஸ்தானின் நியமனத்துக்கு எதிராக வடிவேல் சுரேஷ் போர்க்கொடி

கொழும்பு, ஜூன் 13

காதர் மஸ்தானுக்கு இந்து கலாசார பிரதி அமைச்சர் பதவி வழங்கப்பட்டுள்ளமை நாட்டிலுள்ள இந்துக்களைக் கொச்சைப்படுத்தும் செயல் என நாடாளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ்

பக்கம் 14

## விவசாய பிரதி அமைச்சராக அங்கஜன் நேற்று நியமனம்



கொழும்பு, ஜூன் 13

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ். மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் விவசாயத் துறைப் பிரதி அமைச்சராக நியமிக்கப்பட்டுள்

பக்கம் 14

# காணி பறிப்பு, சிங்களக் குடியேற்றம் ஜனாதிபதி, பிரதமரின் கவனத்துக்கு

## சிறப்புச் செயலணி மூலம் நடவடிக்கை

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஜூன் 13

வடக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் சிங்களக் குடியேற்றங்கள், காணி ஆக்கிரமிப்புக்கள் தொடர்பில் வடக்கில் அமைக்கப்பட்டுள்ள சிறப்புச் செயலணி ஜனாதிபதி, பிரதமர் ஆகியோரின் கவனத்துக் கொண்டு வந்துள்ளது என அவைத் தலைவர் சிவீ.கே.சிவஞானம் தெரிவித்தார்.

நேற்று இடம்பெற்ற மாகாண சபை அமர்விலேயே அவர் இதனைக் கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் –

முல்லைத்தீவு மாவட்டத்தில் இடம்பெறும் சிங்களக் குடியேற்றங்கள்

பக்கம் 14

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் | The Distinctive Voice of The Tamil Speaking People

# கடன் பெறும் சாதனையை ரணில் முறியடித்துள்ளார்

## பந்துல குணர்த்தன எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 13

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் 10 வருட கால ஆட்சியில் 7 ட்ரில் லியன் ரூபா வெளிநாட்டுக் கடன் பெறப் பட்டுள்ள நிலையில் தேசிய அரசு ஆட்சிக்கு வந்து 3 வருட காலத்துக்குள் 4 ட்ரில்லியன் ரூபா கடனைப் பெற்றுள்ளது.

ஆகவே, கடன் பெறும் சாதனையைப் பிரதமர் முறியடித் துள்ளார் என நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணர்த்தன குறிப்பிட்டுள்ளார்.

நேற்று இடம்பெற்ற ஊடக வியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறி னார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆட்சியைப் பொறுப் பேற்கும் போது வெளிநாட்டுக் கடன் தொகை 2 ட்ரில்லியன் ரூபாவாகவே காணப்பட்டது. ஆனால், 2014 ஆம் ஆண்டு அப் பெறுமானம் 7 ட்ரில்லியன் ரூபாவாக உயர்வடைந்தது.

எனினும் அவரது ஆட்சியின் போது நாட்டில் பல்வேறு பொரு



ளாதார அபிவிருத்திகள் இடம் பெற்றன.

ஆனால், 2015 ஆம் ஆண்டு தேசிய அரசு ஆட்சிக்கு வந்த மூன்று வருட காலத்துக்குள் 4 ரில்லியன் ரூபா வெளிநாட்டுக் கடனைப் பெற்றுள்ளதுடன்கடன் களை மீள் செலுத்துவதற்காக வரியை அதிகரிக்கின்றோம் என்று குறிப்பிடுகின்றமை வியப் பிற்குரியதாகவே உள்ளது. இருப் பினும் இதுவரை காலமும் கடன் களைமீளச்செலுத்தியதாகத்தெரிய வில்லை.

இந்த நிலையில், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த வரி அதி கரிப்பு குறித்து பேசும்போது தேசிய அரசு அவர் மீது குற்றச் சாட்டுக்களை முன் வைப்பது வழமையான செயற்பாடாக மாறி விட்டது.

அரசு தற்போது ஏற்படுத்தி யுள்ளபொருளாதார வீழ்ச்சியினை எதிர்வரும் 2020 ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பை ஏற்கும் அரசே எதிர்கொள்ள வேண்டிய நிலைமை தோற்றம் பெறும் என்றும் அவர் தெரிவித்துள் ளார்.

(க)

# மீனவர் போராட்டம் வடக்கு – தெற்கில் மோதலாக மாறலாம்

## அமைச்சரவையில் மனோ தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 13

வடக்கில் மீனவர்கள் முன்னெடுக்கும் ஆர்ப்பாட்டம் தொடர்பில் உடனடியாகக் கவனத்தில் எடுக்கப் பட்டுத் தீர்வு காணப்படாவிட்டால், இந்தச் சிக்கல் வடக்கு–தெற்கு மோதலாக மாறக்கூடிய அபாயம் உள்ளது என தேசிய ஒருமைப்பாடு, நல்லிணக்க, அரசகரும மொழிகள் அமைச்சர் மனோ கணேசன் நேற்று அமைச்சரவையில் எடுத்துக் கூறியுள்ளார்.

இது தொடர்பில் அமைச்சர் மனோ மேலும் தெரிவித்தவை வரு மாறு:-



வடக்கின் கடல் வளத்தை, சட்ட விரோத மீன்பிடி உபகரணங் களைக் கொண்டு, பாது காப்பு தரப்பின் ஒத்து ழைப்புடன், தென்னி லங்கை மீனவர்கள் பெருந்தொகையில் வந்து அபகரிப்பதாக கூறி, வடக்கில் மீனவர் கள் ஆர்ப்பாட்டங்களை நடத்துகிறார்கள்.

இது உடனடியாகக் கவனத்தில் எடுக்கப்பட்டு தீர்வு காணப்படாவிட்டால், இந்தச் சிக்கல் வடக்கு–தெற்கு மோதலாக மாறக் கூடிய அபாயம் இருக்கிறது. இதனாலேயே இதில் நான் தலையிடுகிறேன்.

இதையடுத்து ஜனாதிபதி, இது தொடர்பில் மீன் பிடி அமைச்சர் விஜிதமுனி சொய்ஷாவை உடனடி யாக, சம்பந்தப்பட்ட மீனவர் சங்கப் பிரதிநிதிகள், மக்கள் பிரதிநிதிகள் உட்பட அனைத்துத் தரப்புக ளையும் கூட்டிப் பேசுமாறு பணித்தார்.

அமைச்சரவையின் இன்றைய தினத்துக்கான பத்திரங்கள் ஆலோசிக்கப்பட்டு முடிவுற்றபின், வடக்கின் மீனவர் பிரச்சினையை ஜனாதிபதி தலை மையிலான அமைச்சரவையின் கவனத்துக்குக் கொண்டு வந்தேன்.

அப்போது இதில் தலையிட்ட மீன்பிடித் துறை அமைச்சர் விஜிதமுனி சொய்ஷா, தெற்கில் இருந்து மீனவர்கள் வடக்கிற்கு பாரம்பரியமாக போய் வருவ தாகத் தெரிவித்தார்.

வடக்கிற்கு வரும் அனைத்துத் தென்னிலங்கை மீனவர்களையும், வடக்கின் மீனவர்கள் வரவேண் டாம் எனச் சொல்வதாக எனக்குத் தெரியவில்லை. ஆனால், பெருந்தொகையில் அங்கு சென்று, பெரும் படகுகளைப் பயன்படுத்தி, வடக்கின் மீனவர் கள் செல்ல முடியாத கடலுக்குள் சென்று, கடலட்டை பிடிப்பில் ஈடுபட்டு அங்குள்ள கடல்வளத்தைத் தென் னிலங்கை மீனவர்கள் அபகரிப்பதாகக் கூறியே வடக் கின் மீனவர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுகின்றனர் எனவும், இதற்குப் பாதுகாப்பு தரப்பின் ஒத்துழைப்பு இருக்கிறது எனவும் வடக்கின் மீனவர்கள் குற்றம் சாட்டுவதாக நான் கூறினேன்.

வடக்கின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாவை சேனாதிராசா, சுமந்திரன் ஆகியோருடன் தாம் இதுபற்றிப் பேச்சு நடத்தியுள்ளதாகவும், வடக்கு– தெற்கு மீனவர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள உடன் பாட்டின்படியே தெற்கின் மீனவர்கள், வடக்குக்கு போவதாகவும் மீன்பிடித்துறை அமைச்சர் விஜித முனி சொய்சா பதில் கூறினார்.

இந்த நிலையில் விவாதத்தில் குறுக்கிட்ட அமைச் சர் ராஜித சேனாரத்ன, யுத்த காலத்தில் வடக்கின் மீனவர் கடலுக்குப் போகவில்லை. அதைப் பயன் படுத்திக்கொண்டு, தெற்கின் மீனவர்கள் பெரும் அளவில் வடக்குக்குச் செல்ல முற்பட்டுள்ளார்கள். இன்று யுத்தம் முடிந்த நிலையில் அவர்களுக்கு அவர்களின் கடலில் தொழில் செய்ய இடமளிக்கப் பட்ட வேண்டும் என்று கூறினார்.

# இணையத்தள ஆசிரியரை நாடு கடத்த ஜனாதிபதி கோரவில்லையாம்!

## ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவிப்பு



லங்கா ஈ நியூஸ் ஆசிரியர் பிரதீப் சந்துருவன் சேனாதீரவை, கைது செய்யுமாறு அல்லது இலங்கைக்குத் திருப்பி அனுப்புமாறு பிரித்தானியத் தூதுவரிடம், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கோரினார் என்று வெளியான செய்திகளை ஜனாதிபதி ஊடகப் பிரிவு மறுத்துள்ளது.

கொழும்பு ஆங்கில வாரஇதழ் ஒன்றில் வெளியான இந்தச் செய்தி பொய்யானது என்றும், ஜனாதிபதி ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

பிரித்தானிய தூதுவர் ஜேம்ஸ் டௌரிசுடனான சந்திப்பு மற்றும், லங்கா ஈ நியூஸ் ஆசிரியரை நாடு கடத்துவது அல்லது கைது செய்வது பற்றி வெளி யான செய்திகள் பொய்யானது என் றும் கூறப்பட்டுள்ளது.



கொழும்பில் பணியை முடித்துக் கொண்டு நாடு திரும்பவுள்ள அமெ ரிக்கத் தூதுவர் அதுல் கெஷாப்புக்கு, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இராப்போசன விருந்து அளித்து கௌர வித்தார்.

கடந்த சனிக்கிழமை ஜனாதிபதியின் அதிகாரபூர்வ இல்லத்தில் இந்த இராப் போசன விருந்து அளிக்கப்பட்டது. இதில் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவ ராகப் பணியாற்றி விடைபெறும் அதுல் கெஷாப், தமது குடும்பத்தினருடன் கலந்து கொண்டார்.

இதன்போது. நினைவுப் பரிவுகளும் பரிமாறிக் கொள்ளப்பட்டன.

# 9 மாணவிகள் உட்பட 18 மாணவர்கள் வைத்தியசாலையில்

கொழும்பு, ஜூன் 13

வெலிமடை - வங்கியகும்புற மத்திய மகா வித்தியாலய மாணவர்கள் 18 பேர் நேற்று முன்தினம் குளவிக் கொட்டுக்கு இலக்காகி பொர லந்தை பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளனர்.

பிரதேசத்தில் வீசும் பலத்த காற்று காரண மாக, பாடசாலைக்கு அருகிலுள்ள மர மொன் றிலிருந்த குளவிக் கூடு கலைந்து மாணவர் களைக் கொட்டியுள்ளது எனப் பொலிஸார் தெரி விக்கின்றனர்.

இதன்போது குளவிக் கொட்டுக்கு இலக்கான மாணவர்களுள் 9 பெண் பிள்ளைகளும் அடங்கு கின்றனர் எனப் பொலிஸார் மேலும் தெரிவிக்கின்ற னர்.

குளவிக் கொட்டுக்கு இலக்கான மாணவர்கள் தொடர்ந்தும் பொரலந்தைப் பிரதேச வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.



## வடக்குக் காணி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) சி.வீ.கே.சிவஞானம் தலைமையில் நேற்று நடைபெற்றது.

இதன்போது சபையின் முல்லைத்தீவு மாவட்ட உறுப்பினரும் பிரதி அவைத் தலைவருமான கமலேஸ்வரன், மாகாணக் காணி அமைச்சின் அலுவலகத்தை முல்லைத்தீவில் அமைக்கவேண்டுமென்று கோரிக்கை விடுத்திருந்தார்.

அத்தோடு ஏற்கனவே மாங்குளத்தில்அமைக்கப்படுவதாகச் சொல்லப்பட்ட இந்த அலுவலகம் ஏன் இதுவரை அமைக்கப்படவில்லை என்றும், தற்போது அது வேறு மாவட்டத்துக்கு மாற்றப்பட்டுள்ளதா என்றும் மாகாணக் காணி அமைச்சரான முதலமைச்சரிடம் கேள்விகளை முன்வைத்தார்.

இதற்குப் பதிலளித்த முதலமைச்சர்,

எமது அமைச்சின் 2017 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத்திட்ட ஒதுக்கீட்டில் மாகாணக் காணி அமைச்சின் அலுவலகம் மாங்குளத்தில் அமைப்பதற்குத் திட்டமொன்று முன்வைக்கப்பட்டிருந்தது. இதற்கமைய அங்கு அலுவலகத்தை அமைப்பது தொடர்பான நிலைமைகளும் ஆராயப்பட்டிருந்தன.

அதற்கமைய அங்கு நீர் வசதி உள்ளிட்ட ஏனைய பல வசதிகளையும் கருத்திற்கொண்டு அந்த அலுவலகத்தைக் கிளிநொச்சியில் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. – என்றார்.

இதன்போது குறுக்கிட்ட கமலேஸ்வரன், அங்கு நீர் இல்லை என்பதை ஏற்றுக்கொள்ளமுடியாது என்று வாதிட்டார்.

அதற்கும் பதிலளித்த முதலமைச்சர், எங்கு எந்த அமைச்சு அலுவலகம் அமைப்பதெனத் தீர்மானிக்கப்பட்டிருந்தாலும் அது குறித்து நிபுணர்களும் துறைசார் அதிகாரிகளும் ஆராய்வுகளை மேற்கொள்வார்கள். அவ்வாறு அவர்கள் மேற்கொண்ட ஆய்வுகளின் அடிப்படையில் எனக்குத் தெரிவிக்கப்பட்ட தரவுகளையே நான் இங்கு கூறுகின்றேன்

தற்போது அந்த அலுவலகத்தைக் கிளிநொச்சியில் அமைப்பதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதற்கமைய வெகு வரைவில் அந்தப் பணிகளை ஆரம்பிக்க இருக்கின்றோம். – என்றார்.

இதேவேளை, பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அலுவலகங்கள் அந்த அந்த இடங்களில் அமைக்கப்படவேண்டுமென கமலேஸ்வரன் கோருவது நிர்வாக ரீதியாக ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல என்று அவைத் தலைவர் சிவஞானம் குறிப்பிட்டார். (ஐ-7)

# மேல் மாகாண அணி வெற்றி



யாழ்ப்பாணம், ஜூன் 13

19 வயதுக்குட்பட்ட மாகாணக் கிரிக்கெட் அணிகளுக்கு இடையிலான போட்டி ஒன்றில் மேல் மாகாண அணி வடக்கு மாகாண அணியை ஒரு விக்கெட்டினால் வென்றது.

கொழும்பு தேர்ஸ்டன் மைதானத்தில் நடைபெற்ற இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய வடக்கு மாகாண அணி வழங்கப்பட்ட 50 ஓவர்களில் 48 ஓவர் முடிவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 122 ஓட்டங்களைப் பெற்றது. இதில் வடக்கு மாகாண அணி சார்பில் பானுஜன் 23 ஓட்டங் களையும், அபினாஷ் 19 ஓட்டங் களையும், டினோஜன் 16 ஓட்டங் களையும், சௌமியன் 16 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் மேல்மாகாண அணியின் பசிந்து உ செற்றி 12 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக் களையும், பிரவீன் மைன்ஸ் 11 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக் களையும் வீழ்த்தினர்.

123 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடியமேல்மாகாண அணி 9 விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. இதில் மஹீத் தீக்ஷன 30 ஓட்டங்களையும், எஸ்கொண்டிடோ பெர்னான்டோ 19 ஓட்டங்களையும், டர்ஹம் 15 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் வடக்கு அணி சார்பில் விதுசன் 23 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும், டினுசன் 19 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும், மதுசன் 32 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும், விஜஸ்காந்த் 20 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும், அபினாஷ் 17 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

## வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) அவைத் தலைவர் சி.வீ.கே. சிவஞானம் இதனைத் தெரிவித்தார்.

மாகாண சபையின் ஐந்தாண்டு பதவிக்காலம் முடிவடைவதற்கு இன்னும் சில மாதங்களே உள்ள நிலையில் மாகாண சபையின் பதவிக் காலம் குறித்து ஊடகங்களில் பல்வேறுபட்ட செய்திகள் வெளியாகி வருகின்றன.

இந்நிலையில் முதலாவது வடக்கு மாகாண சபை கடந்த 25.10.2013 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இந்தச் சபையின் ஐந்தாண்டு பதவிக் காலம் எதிர்வரும் 25.10.218 ஆம் திகதியுடன் முடிவடைகிற தென்பதை வெளிப்படுத்தியே இந்தக் கடிதத்தை அனுப்பி வைத்திருக்கின்றேன். – என்றார் அவைத் தலைவர். (ஐ-7)

## இந்து கலாசார...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) இந்து கலாசார அமைச்சுக்குள் புற்று நோய்க் கருவைப் புகுத்தி அணு அணுவாக இந்துக்களை வதைப்பதைவிட, இந்து கலாசார அமைச்சை இழுத்து மூடுங்கள் எனச் சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன்புலோ சச்சிதானந்தம் தெரிவித்துள்ளார்

அதேவேளை நாட்டில் நடப்பது நல் ஆட்சியா? இந்துக்களை கொல்லும் கொல் ஆட்சியா? எனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று சில பிரதி அமைச்சுப் பொறுப்புகளைப் பகிர்ந்தளித்திருந்தார். அதன்போது காதர் மஸ்தானை இந்து கலாசாரப் பிரதி அமைச்சராக நியமித்திருந்தார்.

இதனைக் கண்டித்து சிவசேனை அமைப்பின் தலைவர் நேற்றுச் செவ்வாய்க்கிழமை வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் கூறப்பட்டுள்ளவை வருமாறு:-

இஸ்லாமியரைத் துணை அமைச்சராக்கிய கொடுமையை இந்துக்களை நசுக்கும் முயற்சியாகவே பார்க்கிறோம்.

மாண்புமிகு துணை அமைச்சர் நீறணிந்து சந்தனமிட்டுச் சிவராத்திரி விழாவுக்கு வருவாரா?

ஏனைய சமயத்தவர்களைக் காபிர்கள் (நீசர்கள்) எனக் கற்றவர், உருவ வழிபாட்டையே ஒத்துக்கொள்ளதவர், இந்துக்களை இஸ்லாமுக்கு மத மாற்றுவதையே இலக்காகக் கொண்ட குழு சார்ந்தவர், இந்துக்கள் வழிபடும் மாடுகளைக் கொன்று உண்பவர், இந்து ஒருவர் தன் சட்டைப் பைக்குள்ளேயேனும் இந்துக் கடவுளரின் படத்தை வைத்திருத்தலைக் கொடும் குற்றமாகக் கருதித் தண்டிக்கும் சவூதி அரேபிய நாட்டிற்குப் புனித வழிபாட்டுப் பயணம் மேற்கொள்பவர், மட்டக்களப்புக் கல்லடியில் அம்பாறைக் கல்முனைக்குடியில் இந்துக் கோயில்களின் மேல் இஸ்லாமியப் பள்ளிவாயில்களைக் கட்டியெழுப்பியதை எப்பொழுதும் கண்டிக்காதவர், அத்தகையவர் இந்து கலாசார அமைச்சின் மாண்புமிகு துணை அமைச்சர்.

இந்து கலாசார அமைச்சுக்குள் புற்றுநோய்க் கருவைப் புகுத்தி அணு அணுவாக இந்துக்களை வதைப்பதைவிட, மாட்சிமை தங்கிய குடியரசுத் தலைவரே, இந்து கலாசார அமைச்சை இழுத்து மூடுங்கள். – என்றுள்ளது. (ஐ)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) மேலோட்டமாகச் செய்தி மேய்பவர்களினால் விமர்சிக்கப்படுகின்றன. அதனால்தான் பல சர்ச்சைகள்.

ஊடகங்கள் மீது சுமந்திரன் எம்.பி போன்றோர் குற்றம் சுமத்துவது கூட நாங்கள் இவ்வாறு கேள்விச் செவியர்கள் மாதிரி விடயங்களை அறிக்கையிடுகின்றமையைத்தான். சுமந்திரன் போன்றோர் எங்கள் மீது சுமத்தும் குற்றச்சாட்டுகள் முற்றிலும் தவறானவை என நான் கூற மாட்டேன்.

நேற்று மாகாண எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசாவின் வீட்டுக்கு முன்னால் ஏழாயிரம் ரூபாவுக்கு சில்லறை நாணயக் குற்றிகளைச் சேகரித்து கட்டித் தொங்கவிட்ட சில இளைஞர்களின் செயற்பாடும் கூட இப்படிக் கேள்விச் செவியர் வேலைதான்!

என்ன நடந்தது என்பதை அறியாமல், ஏதோ சாதித்து விட்டவைகள் போல அந்தப் பண முடிச்சைத் தவராசாவின் வீட்டுக் கேற்றில் கட்டித் தொங்கவிட்டு விட்டு அதை 'பப்ளிசிட்டி' பண்ணி, தமக்குத்தாமே 'கிரீடம்' வைத்துக் கொண்டிருக்கின்றார்கள் இந்த இளைஞர்கள் பாவம்!

இவர்கள் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் சார்பில் செயற்படுபவர்கள் என்றுதான் செய்திகள் வெளியாகின.

உண்மையில் அவர்கள் கிழக்குப் பல்கலையைப் பிரதிநிதித்துவப் படுத்துபவர்கள் அல்லர்.

கிழக்குப் பல்கலையின் கலை, பண்பாட்டுப் பீடத்தைச் சேர்ந்தோரே. அந்தப் பீடத்தின் மாணவர் மன்ற கடிதத் தலைப்பையே இந்த விடயத்துக்கு அவர்கள் பயன்படுத்தியுமுள்ளனர்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுக்கு நிதி வழங்கியது தவறு என்றோ, அதற்காக அந்த நிதியைத் திருப்பித் தருமாறோ தவராசா கேட்கவில்லை.

அப்படிக் கேட்டமாதிரி அர்த்தம் பண்ணும் விதத்தில்தான் இந்த இளைஞர்கள் நடந்து கொண்டிருக்கின்றார்கள் – அதாவது கேள்விச் செவியர்கள் மாதிரி.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வை கடந்த மூன்று, நான்கு ஆண்டுகளாக வடக்கு மாகாணசபையே நடத்தி வருகிறது – முதல்வர் தலைமையில்.

அதனால்தான் தவராசா உட்பட அனைத்து வடக்கு மாகாண சபை உறுப்பினர்களும் அந்த நிகழ்வுக்கான செலவினத்துக்காக தலா ஏழாயிரம் ரூபாவைத் தாங்களாகவே முன்வந்து அளித்தனர்.

ஆனால், அதனை வடக்கு மாகாண சபையின் நிகழ்வாக நடத்துவதில் முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன் பெரும் தவறிழைத்து விட்டார். வேறு யாரோ அடாவடியாக – அடாத்தாக – அதற்குள் நுழைந்து, அந்த நிகழ்வை 'ஹை–ஜாக்' செய்து, கைப்பற்றிக்கொண்டு போவதற்கு இடமளித்து, முதல்வர் 'இளிச்சவாயர்' மாதிரி பார்த்து நின்று விட்டார். அது தவறு என்பதை அடுத்த நாள் பத்திரிகையில் இதே பத்தியில் மேலோட்டமாகச் சுட்டிக் காட்டியிருந்தோம்.

அந்தத் தவறையே தவராசாவும் சுட்டிக்காட்டினார். சுட்டிக்காட்ட வேண்டியது எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையில் அவரது கடமை, பொறுப்பு.

வடமாகாணசபையின் கடந்த நான்கரை வருட காலச் செயற்பாட்டில் பல விடயங்கள் பலவீனமாகவே முன்னெடுக்கப்பட்டன என்பது தவராசாவின் குற்றச்சாட்டு.

தவராசா உட்பட்ட மாகாண சபையினர் நடத்திய முள்ளிவாய்க்கால் நினைவேந்தலும் கூட அவ்வாறுதான் கட்டுக்கோப்பான தலைமைத்துவத்துடன் நிகழ்த்தப்படவில்லை. அதனால்தான் யார், யாரோ தம்பாட்டில் புகுந்து, அட்டகாசம் பண்ணும் நிலைமை வந்தது என்பது வெளிப்படையானது.

*"எங்களினால் ஒழுங்குபடுத்தப்பட்ட வருடாந்த நிகழ்வை – எங்கள் நிதிப் பங்களிப்புடன் நடத்தப்பட்ட எமது மாகாண சபை நிகழ்வை – எம்மைப் புறமொதுக்கும் திட்டத்துடன் அடாவடித்தனமாக – அத்துமீறலாக – ஒரு குழு 'ஹ–ஜாக்' செய்து நடத்துவதை முதல்வர் பார்த்துக் கொண்டு செயலிழந்து நின்றார். அப்படியாயின் அது எப்படி எங்கள் நிகழ்வாகும்? எங்கள் பங்களிப்புடன் நடத்த நிகழ்வாக முடியும்? அதனால்தான் அதனைக் குறியீட்டு ரீதியாக முதல்வருக்கும் ஏனையோருக்கும் உணர்த்துவதற்காக எங்கள் மாகாண சபையின் ஏற்பாட்டு நிகழ்வை, எங்கள் சபையின் நிகழ்வாக உங்களால் நடத்த முடியாவிட்டால், சபை உறுப்பினர் என்ற முறையில் நான் பங்களித்த நிதியைத் திருப்பித் தாருங்கள் என்று கோரினேன்."* – எனத் தவராசா கூறும் விளக்கத்தில் நிறைய நியாயங்கள் இருக்கின்றனஎன்றே எனக்குத் தோன்று கின்றது.

ஏழாயிரம் ரூபாவுக்கு சில்லறைக் குற்றிகளைச் சேகரித்துக் கட்டிக் கொண்டு முதலமைச்சர், அவைத் தலைவர் என்று ஒவ்வொருவரிடமும் ஏறியிறங்கி 'ஸ்டண்ட்' அடித்த இந்தக் குழுவும் அந்த 'ஹை–ஜாக்' கும்பலின் பங்காளிகளோ தெரியவில்லை.

மாகாண சபைக்குரிய தனித்துவத்தை முதல்வராக நின்று உறுதியுடன் பேணுவதற்கு அன்றைய தினம் முதல்வர் தவறியமையால் இத்தகைய சலசலப்புகள் ஏற்படுவது தவிர்க்க முடியாததாகத்தான் இருக்கும்.

- மின்னல் -

## கொக்குளாய்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) முன் வைத்து உரையாற்றும் போதே ரவிகரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

முல்லைத்தீவு மாவட்டத்தின் எல்லைக் கிராமங்கள் தொடர்ச்சியாக ஆக்கிரமிக்கப்பட்டும் அபகரிக்கப்பட்டும் வருகின்றன. வளங்களும் சூறையாடப்பட்டு வருகின்றன. இத்தகைய பிரச்சினைகள் தொடர்பில் பல தடவைகள் இந்தச் சபையிலும் எடுத்துக் கூறியிருக்கின்றேன்.

தற்போது கொக்கிளாய் கடற்கரையோரத்தில் இல்மனைட் அகழ்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அவ்வாறு கடற்கரையில் இதனை அகழ்வதால் அங்கு கடல் நீர் உட்புகும் அபாயம் இருக்கின்றது. ஏனெனில் அங்கு சாதாரண கடற்கொந்தளிப்பு ஏற்பட்டாலே கடல் நீர் குடிமனைகளுக்குள் உட்புகும். இந்நிலையில் தற்போது கடற்கரையில் இல்மனைட்டையும் அகழ்வதால் அங்கு பெரிய ஆபத்தே ஏற்படுவதற்கு வாய்ப்பிருக்கின்றது.

ஆகவே இதனைச் சம்பந்தப்பட்ட தரப்பினர்கள் தடுத்து நிறுத்தவேண்டியது அவசியம். மத்திய அரசு இதற்கான அனுமதிகளை வழங்கினாலும் மாகாண அரசு இதனைத் தடுத்து நிறுத்துவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். – என்றார்.

ஏனைய உறுப்பினர்களும் அதனைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்று சபையில் கோரிக்கை விடுத்தனர்.

இதன்போது கருத்து வெளியிட்ட அவைத் தலைவர் சிவஞானம்,

வடக்கு மாகாண சபையின் வளம் வெளியே செல்வதற்கு இடமளிக்க முடியாது. அவ்வாறு எடுத்துச் செல்வதும் பொருத்தமான செயற்பாடு அல்ல. ஆகவே மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் இந்த விடயங்கள் தொடர்பில் உறுப்பினர்கள் வலியுறுத்தவேண்டும். மேலும் எமது மாகாணத்தின் ஆக்கிரமிப்பு அபகரிப்பு, சுரண்டல்கள், சூறையாடுதல் என்பன குறித்து ஜனாதிபதியின் கவனத்திற்குக் கொண்டு வருவோம். – என்றார். (ஐ-7)

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax): 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## பழைய ஏமாற்றுதலுக்குரிய பதில் இப்போது கிட்டுகின்றது

2015 ஜனவரி ஜனாதிபதித் தேர்தலில் பறிகொடுத்த ஆட்சிக் கட்டை மீண்டும் கைப்பற்றிக் கொள்வதற்குத் துடியாகத் துடிக்கின்றது ராஜபக்ஷ அதிகார மையம்.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்தை வெல்லலாம் என்று எந்தச் சிங்களத் தலைவர்களும் கனவு கூடக் காணாத நிலையில், அதைச் செய்து முடித்தோம் என்ற சாதனையை வைத்தே ஆட்சிப் பீடத்தை மீளவும் கைப்பற்றத் திட்டமிட்டு, காய் நகர்த்தியது ராஜபக்ஷ மையம். ஆனால் அதுவே அவர்களின் காய் நகர்த்தலுக்கு ஆப்பாக வந்து வீழ்ந்திருக்கின்றமைதான் விதியின் சோதனை போலும்.

ஜனாதிபதி டி.பி.விஜேதுங்கவின் காலத்தில் இராணுவத்தில் கேணல் தரப்பில் இருந்த தம்மை சேவையில் இருந்து விடுவித்துக் கொண்டார் கோட்டாபய ராஜபக்ஷ. பின்னர் அமெரிக்காவுக்குச் சென்று குடியேறிய அவர், அந்நாட்டுப் பிரஜாவுரிமையையும் பெற்றுக் கொண்டார். இரட்டைப் பிரஜாவுரிமையைப் பேணினார்.

அவரது சகோதரர் பஸில் ராஜபக்ஷ, அமெரிக்க பச்சை அட்டைதாரரே தவிர அந்த நாட்டின் பிரஜாவுரிமை பெற்றவர் அல்லர்.

அமெரிக்காவில் வசித்த கோட்டா, 2005 நவம்பர் ஜனாதிபதித் தேர்தலில் தமது சகோதரர் மஹிந்த ராஜபக்ஷ குதித்ததும் நாடு திரும்பி தேர்தல் பணியில் மும்முரமாக ஈடுபட்டமையும், அதற்குப் பின்னர் நடந்தவையும் நம் அனைவருக்கும் தெரிந்தவைதான்.

மீண்டும் ஜனாதிபதித் தேர்தலில் குதிக்க முடியாத சிக்கலில் இருக்கும் மஹிந்த ராஜபக்ஷ, போர் வெற்றி வீரரான தமது சகோதரர் கோட்டாபய ராஜபக்ஷவைக் களமிறக்கி அதிகாரத்தை வளைத்துப் போடத் திட்டமிட்டார்.

ஆனால், அதற்கான வாய்ப்புகளை ஆரம்பத்திலேயே அடித்து மூடி விட்டது அமெரிக்கா.

தமது பிரஜையாக இருப்பவர் பின்னாளில் இலங்கையின் ஜனாதிபதியாக வருகின்றமையையே அமெரிக்கா விரும்பும் எனப் பலரும் நம்பினர்; எதிர்பார்த்தனர்.

கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதித் தேர்தலில் நிற்பதாயின் தமது இரட்டைப் பிரஜாவுரிமையை – துறக்கவேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றார்.

அதைத் துறப்பதற்கு அவருக்கு அனுமதி அளிக்கும்போது தனக்கேற்ற சில நிபந்தனைகளை விதித்து, அதற்கு அவரை இணங்க வைத்து, அவரிடம் சில உறுதிமொழிகளைப் பெற்றுக்கொண்டு, தனது ஆசீர்வாதத்துடன் அவரைத் தேர்தல் களத்துக்கு அமெரிக்கத் தரப்பு அனுப்பி வைக்கும் என்றும் அவதானிகள் எதிர்பார்த்தனர்.

ஆனால், அவரது இரட்டைப் பிரஜாவுரிமைகளில் ஒன்றான அமெரிக்கப் பிரஜாவுரிமையை அவர் அவ்வளவு சுலபமாகத் துறப்பதற்கு அமெரிக்கா அனுமதி அளிக்காது என்பது இப்போது தெளிவாகியிருக்கின்றது. அதனை அமெரிக்கத் தரப்பு நேரடியாக அவரது அரசியல் பீடத் தலைமையான முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷக்கே கோடி காட்டி விட்டது என்பதுதான் முக்கிய செய்தியாகும்.

ராஜபக்ஷ நிர்வாக மையத்தை அமெரிக்கா நம்பாமல் இருப்பதற்கு – அல்லது நம்பப் பின்னடிப்பதற்கு – வலுவான காரணம் உண்டு.

'விடுதலைப் புலிகளை அழிக்க உதவுகிறோம், ஆனால் புலிகளை அழித்ததும் சிறுபான்மையினரான தமிழருக்கு நீதி, நியாயமான – நின்று, நிலைக்கக் கூடிய – தீர்வை வழங்கவேண்டும்' என்ற நிபந்தனையோடுதான், இந்த மிலேனியத்தில் முதல் தசாப்தத்தில் ராஜபக்ஷ அரசுக்கு அமெரிக்க உதவ முன்வந்தது. அமெரிக்கா மட்டுமல்ல, சர்வதேச சமூகம் முழுவதுமே இந்த அடிப்படையில்தான் ராஜபக்ஷ தரப்புக்கு யுத்தத்தின் இறுதிக் கட்டம் வரை பேராதரவு வழங்கின.

அந்த ஆதரவை பெற்ற ராஜபக்ஷ தரப்பு, அதன் மூலம் – அந்த சர்வதேச ஆதரவு என்ற பலமான வலிமையைப் பிரயோகித்து – புலிகள் இயக்கத்தை அழித்தது.

ஆனால், அதன் பின்னர் என்ன நடந்தது?

அமெரிக்கா உட்பட்ட சர்வதேச சமூகத்துக்குத் தான் வழங்கிய உறுதிமொழியை தமிழருக்கு நியாயமான தீர்வை வழங்குவோம் என்ற வாக்குறுதியை – நிறைவேற்றுவதற்கு ராஜபக்ஷ நிர்வாகம் கிஞ்சித்தேனும் கூட முயற்சி எடுக்கவேயில்லை.

இப்படி அமெரிக்கா உள்ளிட்ட சர்வதேச சமூகத்தை ஏமாற்றிய இத்தரப்பை மீண்டும் ஒரு தடவை நம்பி ஏமாறுவதற்கு அமெரிக்கா தயாராக இல்லை.

அதன் பிரதிபலிப்பை முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு இலங்கையில் தனது பணியை முடித்துத் திரும்பும் அமெரிக்கத் தூதுவர் அதுல் கெஷாப் வெளிப்படுத்தியிருக்கின்றார். அவ்வளவே.

# இராணுவத்தின் மனித நேயத் திட்டத்தின் கீழ் யாழ். மாவட்டத்தில் ஆடைத் தொழிற்சாலை

யாழ்ப்பாணம், ஜுன் 13

இராணுவத்தின் யாழ். மாவட்டக் கட்டளைத் தலைமையகத்தின் மனித நேய வேலைத் திட்டங்களுக்கு அமைய மாவட்டத்தில் தனியார் தொழில் துறைகளில் இளையோர்களுக்கான வேலைவாய்ப்புகளை உறுதிப்படுத்தும் செயல் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதற்காகக் கள நிலை ஆய்வுகளை மேற்கொள்ளக் கொழும்பில் இருந்து துறை சார்ந்த சிறப்பு நிபுணர்கள் குழு அழைத்து வரப்பட்டுள்ளது. அதே நேரத்தில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த துறை சார்ந்த நிபுணர்களின் ஆலோசனைகளும் பெறப்பட்டுள்ளன.

இவர்களால் ஆடை உற்பத்திக் கைத்தொழில், விலங்கு வேளாண்மை போன்ற தொழில் துறைகள் மிகப் பொருத்தமானவையாகப் பரிந்துரைக்கப்பட்டு உள்ள நிலையில் சர்வதேச சந்தை வாய்ப்புகளையும் கருத்தில் கொண்டு நவீன வசதிகளுடன் கூடிய ஆடை உற்பத்தித் தொழிற்சாலை ஒன்றை நிறுவதற்கான பூர்வாங்க வேலைகள் உடனடியாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

05 ஏக்கர் காணியில் தொழிற்சாலையை அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளதுடன் பொருத்தமான இடத்தைத் தெரிவு செய்கின்ற நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டுள்ளன.

இந்தத் தொழிற்சாலை மூலமாகக் குறைந்தது 400 இளைஞர், யுவதிகளுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என்று கணிக்கப்பட்டு உள்ளது. (ஐ)

# தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளருக்கு அழைப்பு

## தேர்தல் ஆணைக்குழு உறுப்பினரின் வழக்கில்

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளரும் யாழ். மாநகர சபை உறுப்பினருமான சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணனை வரும் ஒகஸ்ட் 8ஆம் திகதி யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முன்னிலையாகுமாறு அழைப்பாணை கட்டளை வழங்கப்பட்டுள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர் பேராசிரியர் இரட்ணஜீவன் கூல் சார்பில் பொலிஸார் தாக்கல்செய்த வழக்கிலேயே அவருக்கு நேற்றுமுன்தினம் இந்த அழைப்பாணை கட்டளை வழங்கப்பட்டது.

கடந்த உள்ளூராட்சித் தேர்தலின் பரப்புரை அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் சார்பில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தமிழ்த் தேசிய பேரவை என்ற தேர்தல் கூட்டில் போட்டியிட்டது.

அந்தக் கட்சியின் தேர்தல் அறிக்கை கடந்த ஜனவரி மாதம் 17ஆம் திகதி நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் வெளியிடப்பட்டது.

தேர்தல் அறிக்கையை வெளியிட்டு வைத்த பின் உரையாற்றிய தமிழ்த் தேசியப் பேரவையின் யாழ். மாநகர சபைக்கான முதல்வர் வேட்பாளர் சட்டத்தரணி வி.மணிவண்ணன்,

தமிழ்த் தேசியக் கூட்டமைப் பிற்குச் சார்பாக பல்வேறு கட்டுரைகளை எழுதிய ஒருவரைத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் அதிகாரி ஆக்கியிருக்கின்றார்கள்.

இலங்கைத் தேர்தல்கள் ஆணைக்குழுவில் அதிகாரியான ரட்ணஜீவன்எச்.ஹூலுக்கு அரசால் வழங்கப்பட்டிருக்கின்ற பணி எம்மை நீதிமன்றங்களில் நிறுத்துவதே என்று பகிரங்கமாகக் குற்றஞ்சாட்டியிருந்தார்.

தேர்தல்கள் ஆணைக்குழு சுயாதீனமானது. அந்தக் குழுவின் தலைவர் உள்ளிட்ட உறுப்பினர்கள் அரசமைப்புச் சபையின் ஒப்புதலுடன் நியமிக்கப்பட்டவர்கள்.

இந்த நிலையில் சட்டத்தரணி வி.மணிவண்ணனின் குற்றச்சாட்டு சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது.

தம்மீதான அவதூறு தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர் சாமுவேல் இரட்ணஜீவன் கூல், யாழ்ப்பாணம் பிரதிப் பொலிஸ்மா அதிபரிடம் முறைப்பாடு வழங்கியிருந்தார்.

சட்டத்தரணி வி.மணிவண்ணன் தன்மீது அவதூறாகப் பேசிய விடயத்தைத்தான் ஊடகங்கள் வாயிலாக அறிந்ததாகவும் அது தொடர்பில் உரிய விசாரணைவேண்டும் எனவும் பிரதிப் பொலிஸ்மா அதிபரிடம் அவர் கேட்டிருந்தார்.

அது தொடர்பில் விசாரணைகளை ஆரம்பிக்குமாறு யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் தேர்தலுக்குப் பொறுப்பாக இயங்கும் பிரிவுக்கு பிரதிப் பொலிஸ்மா அதிபர் கட்டளை வழங்கியிருந்தார்.

சம்பவம் தொடர்பில் சட்டத்தரணி வி.மணிவண்ணன் உள்ளிட்டவர்களிடம் பொலிஸார் வாக்குமூலங்களைப் பெற்றிருந்தனர்.

முறைப்பாடு தொடர்பில் இணங்கிச் செல்வதற்கு முறைப்பாட்டாளரான இரட்ணஜீவன் கூல் மறுப்புத் தெரிவித்தார்.

அதனால் சட்டத்தரணி வி.மணிவண்ணனுக்கு எதிராக யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்தனர்.

இந்த வழக்கு யாழ்ப்பாணம் நீதிமன்றில் நீதிவான் சி.சதீஸ்தரன் முன்னிலையில் நேற்றுமுன்தினம் விசாரணைக்கு வந்தது. முறைப்பாட்டாளர் மன்றில் தோன்றினார்.

எனினும் எதிராளியான சட்டத்தரணி வி.மணிவண்ணன் மன்றில் முன்னிலையாகவில்லை. அவருக்கு உரிய அழைப்பாணை வழங்கப்படவில்லை என மன்றில் சுட்டிக்காட்டப்பட்டது.

மன்றில் அனுமதி பெற்று முறைப்பாட்டாளரான இரட்ணஜீவன் கூல் பொலிஸார் மீது குற்றச்சாட்டுக்களை முன்வைத்தார்.

"ஒரு சுயாதீன ஆணைக்குழுவின் உறுப்பினரானவனது முறைப்பாட்டுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பதற்கே பொலிஸார் பின்னடிக்கின்றனர். என் மீதான அவதூறு தொடர்பில் செய்யப்பட்ட முறைப்பாடு தொடர்பில் உரிய விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுக்கவில்லை" என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர் இரட்ணஜீவன் கூல் மன்றிடம் தெரிவித்தார்.

அதனை ஆராய்ந்த நீதிவான், வாக்குமூலம் ஒன்றைப் பொலிஸாருக்கு வழங்குமாறு பணித்தார்.

தான் எழுத்துமூல சமர்ப்பணத்தை மன்றில் முன்வைப்பதாக முறைப்பாட்டாளர் தெரிவித்தார். அதனைத் தனிப்பட்ட சமர்ப்பணமாக முன்வைக்க உத்தரவிட்ட மன்று, வாக்குமூலம் ஒன்றை பொலிஸாருக்கு வழங்குமாறு பணித்தது.

வழக்கு விசாரணையை ஒகஸ்ட் 6ஆம் திகதிவரை ஒத்தி வைத்த நீதிமன்று, அன்றைய தினம், சட்டத்தரணி வி.மணிவண்ணனை மன்றில் முன்னிலையாக அழைப்பாணை கட்டளையிட்டது. (ஐ)

# வாக்காளர் பதிவுப் படிவத்தை உடனடியாகக் கையளியுங்கள்

## தேர்தல்கள் செயலகம் கோரிக்கை

2018ஆம் ஆண்டுக்குரிய வாக்காளர் பெயர்ப் பட்டியலை தயாரிப்பதற்கான படிவங்களை (பிசி படிவம்) துரிதமாக முழுமை செய்து, கிராம அலுவலர்களிடம் ஒப்படைக்குமாறு தேர்தல்கள் செயலகம் பொது மக்களைக் கேட்டுக் கொண்டுள்ளது.

வாக்காளர் பெயர்ப் பட்டியலைத் தயாரிப்பதற்கான படிவங்களை கிராம அலுவலர்கள் தற்போது வீடுகளுக்கு விநியோகித்து வருகின்றனர். இந்தப் பணி இப்போது 90 சதவீதம் நிறைவடைந்திருப்பதாகத் தேர்தல்கள் செயலகம் சுட்டிக்காட்டியுள்ளது.

வாக்காளர் பெயர்ப் பட்டியல் ஒவ்வொரு ஆண்டும் மீளாய்வு செய்யப்படும். வாக்காளர் பெயர்ப் பட்டியல் மீளாய்வு நடவடிக்கைகள் மே மாத நடுப் பகுதியில் ஆரம்பமாகும். ஜுன் முதலாம் திகதி வாக்காளர் தினம். அன்றைய தினம் சகல வாக்காளர்களையும் பதிவு செய்வதற்கு ஏற்ற வகையில், மே மாத நடுப் பகுதியில் இதற்கு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும்.

கிராம அலுவலர்கள் ஊடாக, வாக்காளர் பதிவு விண்ணப்பப் படிவம் (பி.சி.படிவம்) விநியோகம் செய்யும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

இந்நிலையிலேயே அவற்றை முழுமை செய்து வழங்குமாறு தேர்தல்கள் செயலகம் அறிவித்துள்ளது.

இதேவேளை, வாக்காளர் பெயர்ப்பட்டியலில் பதிவு செய்வதற்கான படிவங்கள் (பிசி படிவம்) கிடைக்கப் பெறாதவர்கள் கிராம அலுவலரைத் தொடர்புகொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ஐ)

## நாளை

14.06.2018
வியாழக்கிழமை
நட்சத்திரம் : மிருகசீரிடம் பி.ப 4.05 வரை
திதி : பிரதமை பி.ஓ 12.01 வரை
சுபநேரம் : 7.23 – 8.53 வரை
இராகுகாலம் : 1.23 – 2.53 வரை

# மாவட்ட நீதிபதிகள் 9 பேருக்கு வடக்கு - கிழக்கில் இடமாற்றம்

யாழ்ப்பாணம், ஜூன் 13

வடக்கு – கிழக்கில் 9 மாவட்ட நீதிபதிகளுக்கு நீதிச் சேவைகள் ஆணைக் குழுவால் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

நீதிச்சேவைகள் ஆணைக்குழுவின் ஆண்டின் இடைக்கால இடமாற்ற கொள்கையின் அடிப்படையில் இவர்களுக்கு இடமாற்றம் வழங்கப்படுகிறது. இந்த மாற்றம் எதிர்வரும் 18 ஆம் திகதி நடைமுறைக்கு வரும் என ஆணைக் குழுவின் செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.

மல்லாகம் மாவட்ட நீதிபதி அந்தோனிப்பிள்ளை ஜூட்சன் ஊர்காவற்றுறை மாவட்ட நீதிபதியாகவும், மல்லாகம் மேலதிக மாவட்ட நீதிபதி ரி. கருணாகரன் மட்டக்களப்பு மாவட்ட நீதிபதியாகவும்–

மட்டக்களப்பு மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா கிளிநொச்சி மாவட்ட நீதிபதியாகவும், கிளிநொச்சி மாவட்ட நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராஜா மல்லாகம் மேலதிக மாவட்ட நீதியாகவும், மன்னார் மாவட்ட நீதிபதி ஏ.ஜி.அலெக்ஸ்ராஜா மல்லாகம் மாவட்ட நீதிபதியாகவும்–

கெப்பிற்றிக்கொலாவ மாவட்ட நீதிபதி ரி.ஜெ. பிரபாகரன் மன்னார் மாவட்ட நீதிபதியாகவும், ஊர்காவற்றுறை மாவட்ட நீதிபதி ஏ.ஏ.றியாழ் வவுனியா மாவட்ட நீதிபதியாகவும், அவிசாவளை மாவட்ட நீதிவான் ஜீவராணி கருப்பையா மட்டக்களப்பு மாவட்ட மேலதிக மாவட்ட நீதிபதியாகவும் மாற்றம் பெற்றுள்ளனர். (ஐ)

## விபசாரத்தில் ஈடுபட்ட பிரபல நடிகை கைது!



கொழும்பு, ஜூன் 13

கம்பஹா, கிடகமுல்ல பிரதேசத்தில் ஹோட்டல் என்ற பெயரில் நடத்தி செல்லப்பட்ட விபசாரவிடுதி ஒன்று சுற்றிவளைக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் அதிகாலை இந்த விபசார விடுதி சுற்றிவளைக்கப்பட்ட சமயத்தில் அங்கு விபச்சார நடவடிக்கையில் ஈடுபட்ட பிரபல நடிகை உட்பட 7 பெண்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன், இந்த வீட்டில் பணியில் இருந்த மற்றும் அடையாளப்படுத்த முடியாத நிலையில் 8 ஆண்கள் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் 30 - 40 வயதுக்கு உட்பட்டவர்கள் எனவும் நிட்டம்புவ, கனேமுல்ல, யாகொட, சியம்பலாம்பிட்டிய மற்றும் தெல்கொட ஆகிய பிரதேசத்தை சேர்ந்தவர்கள் எனவும் தெரிய வந்துள்ளது.

கொக்குவில் வாள்வெட்டு:

## கைதாகியவர்களே பாதிப்புற்றோராம்!

### சட்டத்தரணி மன்றில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 13

கொக்குவிலில் கடந்த ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்ற வாள்வெட்டுடன் தொடர்புடையவர்கள் எனப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட சந்தேகநபர்கள் இருவரும் பாதிக்கப்பட்டவர்கள். அவர்கள் இருவரும் தாக்குதலுக்குள்ளானவர்கள். முறைப்பாட்டாளர் மற்றும் அவருடன் இணைந்தவர்களே தாக்குதல் நடத்தியிருந்தனர்

– இவ்வாறு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் சந்தேகநபர்கள் சார்பில் முன்னிலையான மூத்த சட்டத்தரணி மு.றெமிடியஸ் தெரிவித்தார்.

சம்பவத்தை ஊடகங்கள் அவதானித்துச் செய்தி வெளியிட்டுள்ளனவே? என்று மன்று எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த மூத்த சட்டத்தரணி, ஊடகங்கள் பொலிஸார் சொல்பவற்றையே செய்தியாக வெளியிடுகின்றன என்றார்.

அதனால் முறைப்பாட்டாளரை எதிர்வரும் 18ஆம் திகதி மன்றில் முன்னிலையாகுமாறு நீதிவான் அழைப்பாணை உத்தரவு பிறப்பித்தார்.

யாழ்ப்பாணம் கொக்குவில் மேற்கு காந்தி சனசமூக நிலையத்துக்கு அண்மையில் கடந்த ஞாயிறன்று முற்பகல் 11.30 மணியளவில் வாள்வெட்டு வன்முறைச் சம்பவம் இடம்பெற்றது.

4 மோட்டார் சைக்கிளில் வாள்களுடன் வந்த கும்பல், அந்தப் பகுதி இளைஞன் ஒருவரை தாக்கியது. இளைஞன் காயமடைந்தார்.

சம்பவத்தையடுத்து அங்கிருந்துதப்பித்த கும்பலை, அந்தப் பகுதி இளைஞர்கள் ஒன்றுகூடித் துரத்தினர். கும்பலில் ஒருவர் இளைஞர்களால் மடக்கிப்பிடிக்கப்பட்டார். அவர் பயணித்த மோட்டார் சைக்கிளும் மீட்கப்பட்டது.

பிடிபட்டவர் மக்களால் கவனிக்கப்பட்டார். அவர் வழங்கிய தகவலின் அடிப்படையில் மேலும் இருவர் பிடிபட்டனர் என்று பொலிஸார் தெரிவித்திருந்தனர்.

எனினும் வாள்வெட்டுச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டில் இரண்டு சந்தேகநபர்களைப் பொலிஸார் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தினர்.

இதன்போதே சந்தேநபர்கள் சார்பில் முன்னிலையான மூத்த சட்டத்தரணி மு.றெமிடியஸ் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சம்பவம்தொடர்பான சி.சி.ரி.வி. காணொலிப் பதிவு ஒன்றை பொலிஸார் மன்றில் முன்வைத்தனர். காணொலியில் இரண்டு தரப்பும் மோதுகின்றன. மற்றைய தரப்பிடம் வாள்கள் உள்ளிட்ட கூரிய ஆயுதங்கள் உள்ளன என்று மன்றில் சுட்டிக்காட்டப்பட்டது.

பொலிஸார் மற்றும் சந்தேகநபர்கள் சார்பில் முன்னிலை யான மூத்த சட்டத்தரணியின் விண்ணப்பங்களை ஆராய்ந்த நீதிவான் சின்னத்துரை சதீஸ் தரன், சந்தேகநபர்கள் இருவரையும் எதிர்வரும் 18ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

அத்துடன் முறைப்பாட்டாளரை எதிர்வரும் 18ஆம் திகதி மன்றில் முன்னிலையாகுமாறும் நீதிவான் அழைப்பாணை உத்தரவு பிறப்பித்தார்.

மேலும் வன்முறைச் சம்பவம் தொடர்பில் விரிவாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு பொலிஸாருக்குமன்று கட்டளையிட்டது.

(ஐ-7)

## நூல் வெளியீடு


சந்திரகௌரிசிவபாலன் (கௌசி) எழுதிய 'வெள்ளை உடைக்குள் கரையும் பருவம்' சிறுகதை நூல் வெளியீடு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை 17 ஆம் திகதி காலை 9 மணிக்கு யாழ். பொது நூலக குவிமாடம் அரங்கில் த.ரூபன் தலைமையில் நடைபெறவுள்ளது.

முதன்மை விருந்தினர்களாக பேராதனை பல்கலைக்கழக தமிழ்த் துறை பேரசிரியர் துரை மனோகரன், யாழ். பல்கலைக்கழகப் பேராசிரியர் ம.ரகுநாதன், சிறப்பு விருந்தினராக கலாகீர்த்தி உடுவை எஸ். தில்லை நடராசா, 'தினக்குரல்' வார வெளியீட்டின் ஆசிரியர் இ.பாரதி ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

21 ஆம் நூற்றாண்டில் சிறுகதை சிறப்புரையை ஐ.சாந்தனும், வெளியீட்டுரையை வேலணையூர் தாஸும், ஆய்வுரையை கு.ரஜீவன், தி.செல்வமனோகரன் ஆகியோரும் நன்றியுரையை யாழ். பாவாணனும் ஆற்றுவர்.

யாழ். இலக்கிய குவியமும், ஊற்று வலையுலக கலைஞர் மன்றமும் இணைந்து இந்த நிகழ்வை வழங்குகின்றனர். (உ-19)

## மின்தடை



யாழ்ப்பாணம், ஜூன் 13

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வியாழக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரை–


**யாழ் பிரதேசத்தில் –**

மண்டைதீவு, அல்லைப்பிட்டி, மண்கும்பான், வேலணை ஒரு பகுதி, சோலாவத்தை, மண்கும்பான் தேசிய நீர்வழங்கல் வடிகால் சபை, மண்டைதீவு இலங்கை கடற்படை முகாம், மண்கும்பான் கடற்படை முகாம் ஆகிய இடங்களிலும் –

**வவுனியா பிரதேசத்தில் –**

மகாமயிலங்குளம், குடாகச்சக்கொடிய, துட்டுவாகை, தவசிக்குளம் கிராமம், அண்ணாநகர், பூந்தோட்டம், குடாகச்சகொடிய கல் உடைக்கும் ஆலை ஆகிய பிரதேசங்களிலும் –மின்விநியோகம் தடைப்பட் டிருக்கும் என்று மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார். (இ

## றமழான் சிந்தனை



நோன்புப் பெருநாள் தொழுகை நிறைவேற்றிய பின்னர் பெற்றோர்கள் மற்றும் உற்றார், உறவுகளைச் சந்தித்து முஸாபஹா செய்வது அயலிலுள்ள பிறமத சகோதரர்களுடன் அன்புடன் உரையாடுவது நபி முகம்மத் (ஸல்) வழி முறையாகும்.

| ஸஹர் | சுபஹ் |
|---|---|
| 4.19 | 4.34 |

மஃரிப் (நோன்பு திறக்கும் நேரம்) 6.29

எம்.எல்.லாபிர்

# பொலிஸாருக்கு நினைவுத்தூபி அமைப்பதை நிறுத்தவேண்டும்

## சிவாஜிலிங்கம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 13

திருக்கோவில், தம்பிலுவில் பிரதேச சபைக்குட்பட்ட கஞ்சிகுடிச்சாறு பகுதியில் கொலை செய்யப்பட்ட பொலிஸாருக்கு நினைவுத்தூபி அமைக்கும் நடவடிக்கைகளை அரசு நிறுத்த வேண்டும் என வடக்கு மாகாண சபை உறுப்பினர் சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

கஞ்சிகுடிச்சாறு பிரதேசத்தில் பொது மக்களுக்குச் சொந்தமான 400 ஏக்கர் காணிகள் சட்டவிரோதமாகச் சுவீகரிக்கப்பட்டுள்ளன எனவும், அப்பகுதிகளில் நினைவுத்தூபி அமைப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனவும் தகவல்கள் கிடைத்துள்ளன.



அப்பகுதிகளில் புதிய கட்டடங்களும் மக்கள் குடியேற்றங்களும் அமைப்பதற்கான நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டு வருகின்றன எனவும் அறியக்கிடைத்துள்ளது. இதனைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கோடீஸ்வரனும் உறுதிப்படுத்தியுள்ளார்.

ஒரு பக்கத்தில் கொல்லப்பட்ட தமிழ் மக்களது நினைவுச் சின்னங்களை அழித்து வரும் இலங்கை அரசு, மறு பக்கத்தில் பொலிஸாருக்கான நினைவுத் தூபிகளை அமைப்பது மட்டுமல்லாது திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களையும் ஏற்படுத்த முனைகின்றது.

இச்செயற்பாடுகள் மூலம் தமிழ் மக்களுக்கு எதிராக ஜனாதிபதி மற்றும் பிரதமர் உள்ளிட்ட சிங்கள அரசு தனது திட்டமிட்ட நிகழ்ச்சி நிரலைச் செயற்படுத்தி வருகின்றமை தெளிவாகப் புரிகின்றது.–என்றார்.

# குடிதண்ணீர் போத்தல் தொழிற்சாலையை மூடக்கோரி மட்டக்களப்பில் போராட்டம்!

கொழும்பு, ஜுன் 13

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலகத் திற்குட்பட்ட புல்லுமலையில் அமைக்கப்பட்டுவரும் குடிதண்ணீர்ப் போத்தல் தொழிற்சாலையை மூடக்கோரி மட்டக்களப்பில் மாபெரும் கவனவீர்ப்புப் போராட்டமும் பேரணியும் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

மட்டக்களப்புக் கோட்டை முனை இந்துக்கல்லூரி விளையாட்டு மைதானத்துக்கு முன்பாக பதாகைகளை ஏந்தியவாறு ஆயிரக்கணக்கான பொதுமக்கள் பேரணியாக மட்டக்களப்பு மாவட்ட செயலகம் வரையில் சென்றனர்.

செங்கலடி - பதுளை வீதியில் உள்ள பொது அமைப்புகள் மற்றும் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பொது அமைப்புகள் இணைந்து இப்போராட்டத்தினை நடத்தியிருந்தனர்.





இதன் போது அரசியல் கட்சியின் பிரதிநிதிகளும் இதில் கலந்துகொண்டனர்.

இந்தரணியில் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான எஸ்.வியாழேந்திரன், ஞா.சிறிநேசன், முன்னாள் கிழக்கு மாகாண அமைச்சர் கி.துரைராஜசிங்கம், முன்னாள் கிழக்கு மாகாண சபையின் பிரதித் தவிசாளர் பிரசன்னா இந்திரகுமார், முன்னாள் கிழக்கு மாகாணசபை உறுப்பினர்களான கோ.கருணாகரம், இரா.துரைரெட்னம் உட்பட மாநகரசபை உறுப்பினர்கள், பிரதேசசபை உறுப்பினர்கள், தவிசாளர்கள், பிரதி தவிசாளர்கள் என ஏராளமானோர்கலந்துகொண்டனர்.

தொழிற்சாலை அமைக்கும் திட்டத்தை உடன்தடுத்து நிறுத்து, உன் சொந்த உழைப்புக்கு எமது நிலத்தை சோமாலியாவாக மாற்றாதே, மினரல்வோட்டர் கம்பனியால் மிஞ்சப்போவது பாலை வனமே, இயற்கைக்கு உலை வைக்கும் தொழிற்சாலையினை மூடு, எமது வளத்தினை சுரண்டி எவரோ வயிறு வளர்ப்பதா போன்ற சுலோகங்களை தாங்கியவாறு மக்கள் பேரணியில் கலந்துகொண்டனர்.

## தினசரி ராசி பலன் (13.06.2018)

2018 ஆம் ஆண்டு விளம்பி வருடம் வைகாசித் திங்கள் 30 ஆம் நாள் புதன்கிழமை. அமாவாசைத்திதி பி.இ. 1.13 மணி வரை பின்னர் பிரதமை. நட்சத்திரம்: ரோகினி மாலை 4.43 மணி வரை. பின்னர் மிருகசீரிடம். சித்தயோகம் முழுவதும்.

**ராகுகாலம்** - பகல் 12.10 மணி முதல் 1.45 மணி வரை.

**சுபநேரம்** - மாலை 4.24 மணி முதல் 5.54 மணி வரை.

இன்று அமாவாசை விரதம்.

**திவசம் செய்ய வேண்டிய திதி** - வைகாசி மாத அமாவாசை.

**பிறந்த நட்சத்திர வழிபாடு** - ரோகினி.

'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.

**மேஷம்** அனுகூலமான நாள். பொருளாதாரம் வளமாக இருக்கும். குடும்பத்தில் அந்நியோன்யம் அதிகரிக்கும். செய்தொழில், வியாபாரத்தில் அதிரடி மாற்றங்கள் ஏற்படும். உறவினர்களின் சகாயம் கிடைக்கும்.

**ரிஷபம்** ஆக்கபூர்வமான நாள். பொருள் வரவு திருப்தியைத் தரும். குடும்ப உறவினர்களால் மகிழ்ச்சியான சூழ்நிலை உருவாகும். அலுவலகத்தில் இழுபறியாக இருந்த உயர்வுகள், தடை லிலகி கிட்டும்.

**மிதுனம்** அலைச்சல் மிகுந்த நாள். படித்து முடித்த சிலர் வேலை தேடி அலைவார்கள். சிலர் கொடுத்த கடனை மீளப் பெறுவதற்கு அலைந்து திரிவார்கள். வியாபாரிகள் வெளிநாட்டு ஒப்பந்தங்களை தேடுவார்கள்.

**கடகம்** இனிமையான நாள். பணம் தாராளமாகப் புழங்கும். குடும்பத்தில் இனிமை கொலுவிருக்கும். வீட்டில் இனிய நிகழ்ச்சிகள் நடைபெறும். சிலர் நண்பர்களுடன் உல்லாசப் பயணங்கள் செல்வார்கள்.

**சிம்மம்** மத்திமமான நாள். வரவுக்கு மீறிய செலவுகள் உண்டாகும். சுப காரிய செலவால் பண விரயம் ஏற்பட்டு பொருளாதார நெருக்கடிக்கு ஆளாவார்கள். தொழில் வியாபாரத்தில் சுமாரான லாபம் கிடைக்கும்.

**கன்னி** உயர்வான நாள். பொருளாதாரம் உயர்வடையும். குடும்ப ஒற்றுமை மேலோங்கும். இடமாற்றம், ஊதிய உயர்வு, பதவி உயர்வு மனம் போல் கிட்டும். புதிய உறவுகளால் புது மலர்ச்சி பூக்கும். வியாபாரம் ஏற்றம் அடையும்.

**துலாம்** கவலையான நாள். பொருளாதாரம் நலிவுறும். குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் உண்டாகும். காரியத் தடை உண்டாகும். அலைச்சல்கள் அதிகமாகும். வாகனங்களால் நஷ்டம் ஏற்படும்.

**விருச்சிகம்** சமபலன்கள் காணப்படுகின்றன. வரவுக்கு அதிகமான செலவுகள் உண்டாகும். கடன் வாங்க வேண்டி வரும். பிறரால் பல வகையிலும் தொல்லைகள் அனுபவிக்க நேரும்.

**தனுசு** மேன்மையான நாள். பணப்புழக்கம் சரளமாக இருக்கும். இவர்களின் முயற்சிகளுக்கும், செயற்பாடுகளுக்கும் நல்ல முன்னேற்றம் கிடைக்கும். எந்த தொழிலாக இருந்தாலும் அதில் சிறந்து விளங்குவார்கள்.

**மகரம்** அதிர்ஷ்டமான நாள். பணம் தாராளமாகப் புழங்கும். தொழிலில் எதிர்பார்த்த வளர்ச்சியும், மேன்மையும் அடைவார்கள். வியாபாரிகள் வெளிநாட்டுத் தொடர்புகளால் நற்பயன் அடைவார்கள்.

**கும்பம்** யோசனையான நாள். பொருளாதாரம் நலிவடையும். தொழிலில் முன்னைவிட சற்று தொய்வு ஏற்படும். வரவுக்கு மீறிய செலவுகளால் புதிய கடன்படும் நிலை உண்டாகும். உறவுகளுடன் பகைமை உண்டாகும்.

**மீனம்** விருத்தியான நாள். பொருளாதாரம் ஏற்றமடையும். புத்திரர்களுக்கு வேலை வாய்ப்பு அமையும். செய்யும் தொழிலில் நல்ல கவனம் செலுத்தி பயனை அடைவார்கள். சகோதர வழியால் நன்மைகள் கிடைக்கும்.

சந்திராஷ்டம நாள்; சித்திரை 3ஆம், 4ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1ஆம், 2ஆம் 3ஆம் பாதங்களில் பிறந்தோர் சுபகருமங்கள் தொடங்குவதைத் தவிர்க்கவும்.

## தர்மபுரம் வைத்தியசாலையில் இரு தாதிகள் மட்டும் சேவையில்



நெருக்கடிக்குள் வைத்திய சேவை

முல்லைத்தீவு, ஜுன் 13

கிளிநொச்சி தர்மபுரம் பிரதேச வைத்தியசாலையில் தற்போது தம்பதிகளான இரண்டு தாதியர்கள் மட்டுமே பணியில் இருப்பதனால், வைத்திய சேவை நெருக்கடிக்குள்ளாகியுள்ளது.

இந்த தம்பதியர்களான தாதியர்களும் பல்வேறு நெருக்கடிக்குள் முகம் கொடுத்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தர்மபுரம் வைத்தியசாலை கிளிநொச்சியில் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு அடுத்தாக அதிகளவு நோயாளர்கள் சிகிச்சை பெற்றுச் செல்கின்ற வைத்தியசாலையாகக் காணப்படுகிறது.

இந்த நிலையில், இந்த வைத்தியசாலையில் இரண்டு தாதியர்கள கடமையில் இருக்கின்றனர். இவர்களில் ஒருவர் மாறி ஒருவரே கடமையாற்றுகின்றனர். இதனால், முழுமையான சேவையை வழங்க முடியாதுள்ளது.

அத்தோடு, இவர்கள் கணவன், மனைவி என்பதனால் குடும்பத்தில் இடம்பெறுகின்ற எந்த நிகழ்வுக்கும் இருவரும் சேர்ந்து விடுமுறை எடுத்துச் செல்ல முடியாத நிலைமையும் ஏற்பட்டுள்ளது.

இதனால், இவர்களும் மன உளைச்சலுக்குள் உள்ளாகியுள்ளனர் என வைத்தியசாலை நிர்வாகத் தரப்பினர் தெரிவிக்கின்றனர்.

ஏற்கனவே, ஓய்வுபெற்ற தாதியர் ஒருவரை மீள்நியமனம் பெற்றுத்தரலாம் எனக் கூறி மீண்டும் சேவைக்கு இணைத்துக்கொள்ளப்பட்ட போதும் அவருக்கு உறுதியளித்தப்படி ஐந்து மாதங்களுக்கு மேல் மீள்நியமனமோ கொடுப்பனவுகளோ வழங்கப்படாது விட்டமையால், அவரும் பணியிலிருந்து கடந்த மாதம் விலகிச் சென்று விட்டார். என்பதும் குறிப்பிடத்தக்கது

இது தொடர்பில் உரிய அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு சென்றபோதும் இதுவரை எவரும் கண்டு கொள்ளவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில், கிளி நொச்சி பிராந்திய பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் குமாரவேல் தெரிவிக்கையில் -

தர்மபுரம் வைத்தியசாலை யில் நான்கு தாதியர்கள் கடமையில் இருக்க வேண்டும். ஆனால், இருவர் மாத்திரமே உள்ளனர். இது தொடர்பில் நாம் உரிய இடங்களுக்கு அறிவித்திருக்கின்றோம் எனத் தெரிவித்தார். (க-71)

## தபால் ஊழியர்களின் மலையகத்திலும் போராட்டம்!

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து தபால் ஊழியர்கள் ஆரம்பித்துள்ள தொழிற்சங்க போராட்டம் காரணமாக தபால் சேவைகள் பாதிப்படைந்துள்ளன.

நேற்றுமுன்தினம் மாலை 4 மணி முதல் ஆரம்பிக்கப்பட்ட இந்தப் போராட்டத்தில் தபால் திணைக்களத்தின் அனைத்து ஊழியர்களும் ஈடுபட்டுள்ளனர்.

சுற்றறிக்கையில் உள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்குமாறு தெரிவித்து இந்தப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.



தங்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றும் வரையில் போராட்டத்தை மேற்கொள்ளவுள்ளாம் எனத் தபால் ஊழியர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து மலையகத்தின் நுவரெலியா, ஹற்றன், தலவாக்கலை, கொட்டகலை ஆகிய பிரதான அஞ்சல் அலுவலகம் மற்றும் உப அஞ்சல் அலுவலகங்கள் போன்றவற்றில் கடமையாற்றுகின்ற பாணியாளர்கள் அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதன் காரணமாக மலையகத்தில் உள்ள அஞ்சல் அலுவலகங்கள் மூடப்பட்ட நிலையில் காணப்படுகின்றன.

இதனால் பல்வேறு தேவைகளுக்காக அஞ்சல் அலுவலகங்களுக்குச் செல்லும் மக்கள் ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்கின்றமை குறிப்பிடத்தக்கது.





# அரபு தேசமான காத்தான்குடி நகரம்

மட்டக்களப்பு மாவட்டத்தின் காத்தான்குடி நகரம் குட்டி அரபு நாடு போன்று காட்சியளிக்கும் காட்சிகள் வெளியாகியுள்ளன.

இஸ்லாம் மக்களின் புனித மாதமாக கருதப்படுகின்ற றமழான் மாதம் இடம் பெற்று வருகின்றது.

றமழான் மாதத்தை முன்னிட்டு முஸ்லிம் மக்கள் பெரும் செலவில் அலங்கரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வது வழமையாகும்.

அதற்கமைய குட்டி அரபு நாடு போன்று காத்தான்குடி நகரம் அலங்கரிக்கப்பட்டுள்ளது.

மிகவும் பின் தங்கிய நிலையில், யுத்தத்தால் பாதிக்கப்பட்ட நிலையில் காணப்பட்ட நகரம் தற்போது பார்ப்பவர்கள் ரசிக்கும்படி உள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# 39 ஆயிரம் சிறுவர்கள் அபாயமான தொழிலில்!

கொழும்பு, ஜூன் 13

இலங்கையில் சுமார் 39 ஆயிரம் சிறுவர்கள் அபாயகரமான தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர் என சர்வதேச தொழிலாளர் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

நேற்றைய சிறுவர் தொழிலாளர்களுக்கு எதிரான சர்வதேச தினத்தை முன்னிட்டு சர்வதேச தொழிலாளர் சம்மேளனம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில், தரவுகளின்படி உலகில் 15 கோடி 20 லட்சம் சிறுவர்கள் தொழில்களில் ஈடுபட்டு வருகின்றனர். இலங்கையில் சுமார் 39 ஆயிரம் சிறுவர்கள் அபாயகரமான தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதன் மூலம் அவர்களின் இளமைக் கல்வி முற்றாக மறுக்கப்படுகிறது. சிறுவர்கள் தொழில்களில் ஈடுபடுத்தப்படுகின்றமையால் அவர்களின் நீண்டகால உடல் ஆரோக்கியம் பாதிக்கப்படுகிறது என சர்வதேச தொழிலாளர் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

# தெற்கில் வேகமாக பரவிய வைரஸ் காய்ச்சல் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது

கொழும்பு, ஜூன் 13

தெற்கில் பரவிய வைரஸ் காய்ச்சல் 75 சதவீதம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது என சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தென் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஜீ.விஜய சூரிய தகவல் தருகையில் மாகாணத்தில் பரவிய வைரஸ் காய்ச்சல் தற்போது 75 சதவீதமளவில் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்று தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நோயைக் கட்டுப்படுத்துவது தொடர்பில் மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் திட்டம் கடந்த காலத்தில் சிறப்பாக அமுலாகியது. அம்பாந்தோட்டை மாவட்டத்தில் பரவிய வைரஸ் காய்ச்சலும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

மாணவர்களைப் பாடசாலைகளுக்கு அனுப்பிவைத்து இயல்பு வாழ்க்கையில் ஈடுபடக்கூடிய சந்தர்ப்பம் உருவாகியுள்ளது.



எனவே, வைரஸ் நோய் குறித்து அநாவசிய அச்சத்தை ஏற்படுத்திக் கொள்ளத் தேவையில்லை என்றும் தென்மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஜீ.விஜய சூரிய கூறியுள்ளார். (க)

# போரை முடிவுக்கு கொண்டு வந்த எனக்கு வரியை குறைப்பது பெரிய விடயமல்ல!

## மஹிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு

போரை முடிவுக்குக் கொண்டு வந்த எனக்கு வரியைக் குறைப்பது பெரிய விடயம் அல்ல என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு அளித்த நேர்காணலில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நூற்றுக்கு இருபது வீதத்தால் வரியை குறைக்குமாறு என்னிடம் சவால் விடுக்கும் தரப்பினர் கடந்த காலங்களில் போரை முடிவுக்குக் கொண்டு வருமாறு என்னிடம் சவால் விடுத்திருந்தனர். இந்த தரப்பினர் நான் போரை முடிவுக்குக் கொண்டு வருவேன் என நினைக்கவில்லை.

நான் போரை முடிவுக்குக் கொண்டு வந்த காரணத்தால் இன்று அவர்கள் வடக்கு, கிழக்கிற்கு பயமின்றி செல்கின்றனர். எமது படையினர் உயிரைத் தியாகம் செய்து தாய் நாட்டை மீட்டெடுத்தனர்.



வரியை குறைக்குமாறு எனக்கு சவால் விடுக்கும் தரப்பினர் முதலில் சவால்களை எவ்வாறு எதிர்நோக்குவது என்பதனை கற்றுக்கொள்ள வேண்டும். போரையே முடிவுக்குக் கொண்டு வந்த எனக்கு வரியை 20 வீதத்தால் குறைப்பது பெரிய விடயமன்று என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# உடற்பருமனைக் குறைத்துக்கொள்ள 24 மணி நேரமும் துரித ஆலோசனை

## சுகாதார அமைச்சு நடவடிக்கை

கொழும்பு, ஜூன் 13

மிதமிஞ்சிய உடற்பருமன் பிரச்சினை தொடர்பில் துரித ஆலோசனை வழங்க 24 மணி நேரமும் இயங்கும் தொலைபேசி சேவையை சுகாதார அமைச்சு முன்னெடுத்துள்ளது.

அளவுக்கு அதிகமான உடற்பருமனைக் குறைத்துக்கொள்வதற்கு துரித ஆலோசனை வழங்கக் கூடியவகையில் இந்த தொலைபேசி சேவை அமுலாகிறது.

இந்தச் சேவை 24 மணித்தியாலமும் அமுலில் இருக்கும். இதனை தொடர்பு கொள்ள அழைக்க வேண்டிய இலக்கம் 0710 107 107 என்பதாகும். இதனூடாக இலவச ஆலோசனைகளை பெற முடியும் எனச் சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

மருத்துவர்களையும், விசேட நிபுணர்களையும் நேரடியாகத் தொடர்பு கொள்ளக்கூடிய 'சுவசரிய நடமாடும் சுகாதார ஆலோசனை சேவையை' சுகாதார அமைச்சின் சுகாதார மேம்பாட்டுப் பணியகம் மக்கள் பணியாக முன்னெடுக்கின்றது.

ஜூன் மாதம் போஷாக்கு மாதமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதன் தொனிப்பொருள் உடல் எடை குறைத்து சரியான வழியில் செல்வோம் என்பதாகும்.

இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் பிரகாரம் மக்களுக்கு மத்தியில் அளவுக்கு அதிகமான உடற்பருமன் என்பது சுகாதார நெருக்கடியாக மாறியிருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

வயது வந்தோர் மத்தியில் சுமார் 17 சதவீதமானோர் உடல் எடைக்கு பொருத்தமற்ற வகையில் அதீத பருமன் மிக்கவர்களாகக் காணப்படுகிறார்கள் என்பது தெரியவந்துள்ளது.

# கிழக்குப் பல்கலைக்கழக மருத்துவபீடம் இன்று திறப்பு

கொழும்பு, ஜூன் 13

கிழக்குப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் இனிமேல் பகிடிவதைத் தொடராது என மருத்துவபீட மாணவர்களால் பீடாதிபதிக்கு எழுத்து மூலம் வழங்கப்பட்ட வாக்குறுதியையடுத்து இன்று முதல் கல்வி நடவடிக்கைகளுக்காக மருத்துவபீடம் திறக்கப்படவுள்ளது எனக் கிழக்குப் பல்கலைக்கழக மருத்துவபீட பீடாதிபதி வைத்தியர் திருமதி.ஏஞ்சலா அருள்பிரகாசம் தெரிவித்துள்ளார்.

கிழக்கு பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர்களால் முன்னெடுக்கப்பட்ட பகிடிவதை காரணமாக கடந்த மே மாதம் 25 ஆம் திகதி முதல் கிழக்குப் பல்கலைக்கழகம் மருத்துவபீடம் கால வரையற்று மூடப்பட்டிருந்தது .



இந்த நிலையில் மருத்துவபீட மாணவர்களுக்கு , மருத்துவபீட பீடாதிபதிகள் மற்றும் விரிவுரையாளர்களுக்கும் இடையில் நடைபெற்ற கலந்துரையாடலின் பின் பகிடிவதை இனி மேலும் தொடராது என்று மருத்துவபீட மாணவர்களால் பீடாதிபதிக்கு எழுத்து மூலம் வழங்கப்பட்ட வாக்குறுதியைப் பரிசீலனை செய்த கிழக்குப் பல்கலைக்கழக மூதவை கல்வி நடவடிக்கைகளை மீண்டும் அங்கு ஆரம்பிக்க ஆவன செய்துள்ளது.

இதன்படி இறுதி ஆண்டு மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் இன்று ஆரம்பிக்கப்படவுள்ளமையுடன்,தொடர்ந்து ஏனைய வருட மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் ஆரம்பமாகும் என கிழக்குப் பல்கலைக்கழக மருத்துவபீட பீடாதிபதி தெரிவித்துள்ளார்.

# கிளிநொச்சி – பூநகரிப் பிரதேசத்துக்கான அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம்





கொழும்பு, ஜுன் 13

கிளிநொச்சி – பூநகரிப் பிரதேசத்துக்கான பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம் நேற்று நடைபெற்றுள்ளது.

இந்த ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் பூநகரிப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இணைத்தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் தலைமையில் நடைபெற்றுள்ளது.

இதில் பூநகரிப் பிரதேச சபையின் தவிசாளர் மற்றும் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், திணைக்களத் தலைவர்கள் எனப்பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது இவ்வருடத்தில் முன்னெடுக்கப்படுகின்ற அபிவிருத்தி வேலைகள் மற்றும் தேவைப்பாடுகள் குறித்து கலந்துரையாடப்பட்டுள்ளது.

# தபால் ஊழியர்களின் விடுப்புகள் இரத்து

கொழும்பு, ஜூன் 13

தபால் திணைக்கள ஊழியர்கள் அனைவரினதும் விடுப்புகள் இரத்துச் செய்யப்படுகின்றன எனத் தபால் மா அதிபர் அறிவித்துள்ளார்.

தபால் திணைக்களத் தொழிற்சங்கங்கள் தொடர் பணிப்புறக்கணிப்பை முன்னெடுக்கின்ற நிலையிலேயே அவர் இந்த அறிவிப்பை நேற்றுமுன்தினம் மாலை விடுத்தார். (ஐ)

# நூல் வெளியீடும் பெரியோர் கௌரவிப்பும்





யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் ம.நிரேஷ்குமாரின் 'புளிய மரத்துப் பேய்கள்' சிறுகதைத் தொகுப்பு நூல் வெளியீடும் பெரியோர் கௌரவிப்பு நிகழ்ச்சியும் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி சதாசிவம் அமிர்தலிங்கம் தலைமையில் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் அண்மையில் வெகு சிறப்பாக நடைபெற்றன.

விழாவின் பிரதம அதிதியாக ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரியின் ஓய்வுநிலைப் பீடாதிபதிஆறுமுகமும் சுந்தரலிங்கமும், சிறப்பு அதிதியாக யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் ஓய்வுநிலை அதிபர் திருவாளர் ஐயம்பிள்ளை தயானந்தராஜா, கௌரவ அதிதியாக யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் ஓய்வுநிலை விரிவுரையாளர் முருகேசு கௌரிகாந்தன் கலந்து சிறப்பித்திருந்தனர்.

நூல் நயவுரை முருகேசு கௌரி காந்தனால் நிகழ்த்தப்பட்டது.



## எமது சமூகத்தை அச்சுறுத்தி வரும்

# சிறுவர் துஷ்பிரயோகங்கள்

உலகளாவிய ரீதியிலும் சரி, நம் நாட்டைப் பொறுத்த வரையிலும் சரி சமகால சமுதாயப் பிரச்சினைகளில் முக்கிய இடத்தினையும் முதல் இடத்தையும் வகிப்பது சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான பிரச்சினையாகும். இதை நாம் இன்று தகவல் தொடர்புச் சாதனங்கள் வாயிலாகவும், சிலவற்றை நேரடியாகவும், அறிந்து கொள்ளக்கூடியதாக உள்ளது.

இதற்கு முக்கிய மூலாதாரமாக இருப்பது பெற்றோரும் சமூகமும், சிறுவர்களின் உடல் – உள வளர்ச்சியினைப் பற்றிச் சரியாகப் புரிந்து கொள்ளாததும், அவர்கள் உணர்வுக்கு மதிப்பளிக்காததும் ஆகும். ஒரு வகையில் பார்த்தால் பெற்றோர்களுக்கும், சமூகத்திற்கும் சிறுவர்களுடைய உளவளர்ச்சி பற்றிய விழிப்புணர்வின்மையும், சிறுவர் துஷ்பிரயோகம் பற்றிய அடிப்படை அறிவின்மையும் எனலாம்.

அண்மைய அவதானிப்புக்களில் உலகத்தை உலுக்கிய சிரியத் தாக்குதலில் பச்சிளங்குழந்தைகள் ஈவிரக்கமின்றி கொல்லப்பட்டமை இந்தியாவின் ஆஸிபா சிறுமி கூட்டு பலாத்காரம் செய்தமை நமது நாட்டில் வித்தியா முதல் முறிகண்டியில் வயோதிபரால் தொடர்ச்சியாகப் பாலியலுக்கு உட்படுத்திய சிறுமி என்பவற்றைப் பார்க்கையில் மனித உரிமைகள் அமைப்புக்கள் இருக்கின்றதா? என கேள்வி எழுப்பியுள்ளன.

எமது நாட்டிலும் பல்வேறு தரப்பினராலும் துஷ்பிரயோகங்கள் இடம்பெறுகின்றமை தொடர்கதையாகி வருகின்றன.

நம் சமூகத்திலும் ஒரு சமூக நோயாக உருவெடுத்துள்ள சிறுவர் துஷ்பிரயோகம் அவர்களை உடலளவிலும், மனிதளவிலும் பாதிப்பை ஏற்படுத்தும் அதே சமயம் அவர்களுக்கு அந்தப் பாதிப்புக்களால் எதிர்காலத்தைப் பற்றிய பயத்தையும். நம்பிக்கையின்மையையும் ஏற்படுத்துகின்றன. அதுமட்டுமன்றி குற்ற உணர்வையும், பால்வினை நோய் களையும் ஏற்படுத்தும் அதேசமயம் அவர்களது எதிர்காலத்தையே கேள்விக் குறியாக்கியுள்ளது. இவ்வாறு பாதிக்கப்பட்ட சிறுவர்கள் எதிர்காலத்தில் மன நோயாளிகளாகவும், சமூக விரோதிகளாகவும் மாறக்கூடிய வாய்ப்பு உள்ளன.

போதிய உணவு கொடாமை, தேவைகளை பூர்த்தி செய்யாமை போதையூட்டலும் நஞ்சூட்டலும், வைத்திய சிகிச்சையை மறுத்தல், கல்வி பெற வாய்ப்பளிக்காமை, பிள்ளையைப் பற்றி பொய் கூறல், உடல், உள ரீதியான இம்சை, சட்டவிரோதமாக சிறுவரை வேலைக்கு அமர்த்தல், சிறுவர் ஊழியம், பிள் ளைகளைக் கொலை செய்தல், கைவிடல், விற்றல், கடத்தல், பாலியல் தொழிலாளியாக்கல், பிள்ளைகளை போரில் இணைத்தல், பிள்ளைகளை பிச்சையெடுக்கவிடல், போதைப்பொருள் கடத்தல், பாவித்தல், பாலியல் சார்ந்த படங்களை பார்த்தல் என்பன துஷ்பிரயோகங்களாகக் கொள்ளப்படுகின்றன.


18 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் பெரும்பாலும் பெற்றோர்கள், பாதுகாவலர்களின் கண்காணிப்பிலேயே வளர வேண்டும். அதிகளவான துஷ்பிரயோகங்கள் வயதானவர்களால் நிகழ்வதாக ஆய்வுகள் எடுத்துக்காட்டுகின்றன. (குறிப்பாக ஆண்கள்) இதனால் வயதானவர்கள் தனியாக இருக்கும் வீட்டிற்குச் சிறுவர்களை அனுப்புவதை தவிர்த்து அயலவர் வீட்டில் அதிக நேரம் செலவிடுவதையோ, வீட்டில், வெளியிடங்களில் அந்நிய நபர்களுடன் அல்லது அவர்களைவிட வயதில் மூத்தவர்களுடன் நெருக்கமாக பழகுவதை தவிர்ப்பதுடன் உடல் உறுப்புக்களில் ஏனையவர்கள் தீண்டத்தகாத இடம் எது? தீண்டத்தக்க இடம் எது? என்பதையும் சொல்லிக் கொடுக்க வேண்டும்.

சிறுவர் துஷ்பிரயோகங்கள் நீடிக்குமானால் நமது சமுதாயத்தின் பண்பாடு, கலாசாரம் என்பன கேள்விக்குறியாகிவிடும். எனவே இனியாவது தற்போதைய சூழ்நிலை, மாற்றங்கள், தூண்டற் காரணிகளை இனங்கண்டு நல்வழிப்படுத்துவது எமது ஒவ்வொருவரினதும் தலையாய கடமையாகும்.

**திருமதி. தவப்பிரியா இராகுலன்**
*(ஆசிரியர்)*
*(அச்சுவேலி மத்திய கல்லூரி)*

# செவ்வாய் கிரகத்தில் உயிரினங்கள் இருக்கின்றனவா?

## நீண்டகால மர்மத்துக்கு விடை தரும் நாசா



“இன்னும் அதிக பட்சம் நூறு வருடங்கள்தான் பூமியில் மனிதர்கள் வாழ முடியும். அதற்குள்ளாக வேறு இடத்தைத் தேடி குடியேறிவிட வேண்டும்”- என அறிவியலாளர் ஸ்டீஃபன் ஹாக்கிங் இறப்பதற்கு சில மாதங்களுக்கு முன்னால் தெரிவித்திருந்தார்.

உண்மையில் அவர் கூறியபடியே நிஜத்தில் நிகழ்வதற்கான சாத்தியங்கள் அதிகம். இந்தப் பூமி இப்படியே நிலையாக இருந்துவிடப்போவதில்லை, மனிதர்களும் அதை விரும்புபவர்கள் போலத் தெரியவில்லை. எதிர்காலத்தில் ஒருவேளை மனிதர்கள் வாழத் தகுதியில்லாத இடமாகப் பூமி மாறினால் மனிதர்களுக்கு இருக்கும் ஒரே வழி ஸ்டீஃபன் ஹாக்கிங் கூறியமையைப் போல வேறு கிரகத்தில் குடியேறுவது தான்.

**எதிர்காலத்தில் எங்கே போய் வாழ்வது?**

எதிர்கால குடியேற்றத்துக்கான தேடுதலை மனிதர்கள் தொடங்கிப் பல ஆண்டுகள் கடந்து விட்டன. உலக நாடுகளின் முதல் இலக்கு பூமிக்கு அருகிலே சுற்றிக்கொண்டிருக்கும் நிலவுதான். அமெரிக்கா, ரஷ்யா எனப் பல உலக நாடுகள் நிலவை ஆராய்

> **“செவ்வாயில் தண்ணீர் இருக்கிறதா என்று தேட ஆரம்பித்தவர்கள் படிப்படியாக அடுத்த கட்டத்தை நோக்கி நகர்ந்தார்கள். தேடலின் அடுத்தகட்டம் உயிர்கள் இருக்கின்றனவா என்பதை ஆராய்வதுதான். ஒரு வேளை உயிர்கள் இருப்பது உறுதி செய்யப்பட்டு விட்டால் அடுத்தகட்டமாக மனிதர்கள் வாழ்வதற்கான சூழலை உருவாக்குவதும் அதன் பிறகு அங்கே குடியேறுவதும் தான் இந்த ஒட்டுமொத்த ஆராய்ச்சியின் இறுதி நோக்கமாக இருக்கும்.”**

வதில் கவனத்தை செலுத்தின. ஆனால், அங்கே உயிர் வாழ்வதற்கான சாத்தியக்கூறுகள் இல்லையென்று தெரிந்ததும் உலக நாடுகளின் கவனம் சூரியக் குடும்பத்தில் இருக்கும் மற்ற கோள்களின் பக்கமாகத் திரும்பியது. குறிப்பாகச் செவ்வாயின் பக்கம்.

1950 ஆண்டுகளில் செவ்வாய்க் கிரகம் யாருடைய கவனத்தையும் ஈர்க்கவில்லை. ஆனால், 1960 ஆண்டுகளுக்குப் பிறகு அமெரிக்கா செவ்வாயை ஆராய்ச்சி செய்யும் திட்டங்களைத் தொடர்ச்சியாக செயற்படுத்தியது. அதன் பிறகு வழக்கம்போல மற்ற உலக நாடுகளும் செவ்வாயின் பக்கம் திரும்பின.

அதுவும் கடந்த கால் நூற்றாண்டுகளில் செவ்வாய்க் கிரகத்தைப் பற்றிய ஆராய்ச்சி உச்சத்தை எட்டியிருக்கிறது. இந்தியாவும் கூட தனது பங்குக்கு மங்கல்யான் என்ற விண்கலத்தைச் செவ்வாயின் சுற்றுவட்டப் பாதைக்கு அனுப்பி ஆய்வு செய்து வருகிறது. முதலில் தண்ணீர் இருக்கிறதா என்று தேட ஆரம்பித்தவர்கள் படிப்படியாக அடுத்த கட்டத்தை நோக்கி நகர்ந்தார்கள். தேடலின் அடுத்தகட்டம் உயிர்கள் இருக்கின்றனவா என்பதை ஆராய்வதுதான். ஒரு வேளை உயிர்கள் இருப்பது உறுதி செய்யப்பட்டு விட்டால் அடுத்த கட்டமாக மனிதர்கள் வாழ்வதற்கான சூழலை உருவாக்குவதும் அதன் பிறகு அங்கே குடியேறுவதும் தான் இந்த ஒட்டுமொத்த ஆராய்ச்சியின் இறுதி நோக்கமாக இருக்கும்.



செவ்வாயின் வளிமண்டலத்தில் சுற்றி வரும் செயற்கைக்கோள்களால் புகைப்படம் எடுக்க முடியும். வளிமண்டலத்தை ஆராய முடியும் ஆனால், அங்கே ஏதேனும் உயிர்கள் வாழ்கின்றனவா என்பதைக் கண்டறிய தரையில் இறங்குவது தான் ஒரே வழி. ஆனால், பூமியின் வளிமண்டலத்தை விட நூறு மடங்கு அதிக அடர்த்தியைக் கொண்டசெவ்வாயில் ஓர் ஆய்வு வாகனத்தைப் பாதிப்பின்றி தரையிறக்குவது என்பது சற்றுக் கடினமான விடயம்தான்.

1971 ஆம் ஆண்டில் சோவியத் யூனியன் இரண்டு விண்கலங்களைச் செவ்வாயில் தரையிறக்க முயற்சி செய்து அது தோல்வியில் முடிந்தது. 1997 ஆம் ஆண்டில் நாசா அனுப்பிய Sojourner என்ற ஆய்வு வாகனம் செவ்வாயின் தரையை முதன் முதலாகத் தொட்டது. அது மூன்று மாத காலம் சிறப்பாகச் செயல்பட்டது.

அதன் பிறகு அமெரிக்கா அனுப்பிய பல ஆய்வு வாகனங்கள் செவ்வாயின் நிலப்பரப்பில் இறங்கி ஆய்வு செய்தன.

இவ்வளவு இருந்தாலும் கடைசியாக நாசா அனுப்பிய க்யூரியாசிட்டி (Curiosity) ரோவர் கொஞ்சம் ஸ்பெஷல். 2011 ஆம் ஆண்டில் அனுப்பப்பட்ட இது ஆகஸ்ட் 6, 2012 அன்று செவ்வாயில் வெற்றிகரமாகத் தரையிறங்கியது. இது ஸ்பெஷலாக கருதப்பட காரணம் இதில் பொருத்தப்பட்டிருந்த கருவிகள்தான்.

தரையைத் தோண்டி எடுத்து ஆய்வு செய்வதற்கு, இன்னும் பல பரிசோதனை மேற்கொள்ள என பல்வேறு மேம்படுத்தப்பட்ட கருவிகள் இதில் பொருத்தப்பட்டிருந்தன. ஆறு வருட காலத்தில் 19 கிலோமீட்டர் தூரம் பயணித்து இன்று வரை சிறப்பான நிலையில் செயல்பட்டு வருகிறது. அது இறுதியாக க்யூரியாசிட்டி ரோவர்தான் செவ்வாயின் நீண்ட கால மர்மத்துக்கும் விடையைக் கண்டுபிடித்திருக்கிறது.

செவ்வாய் குறித்த மிக முக்கியமான அறிவிப்பு ஒன்றை வெளியிட முடிவு செய்திருப்பதாக நாசா கடந்த சில நாள்களுக்கு முன்னர் தெரிவித்திருந்தது. அதன்படி செவ்வாயில் முக்கியமான கரிம மூலக்கூறுகளைக் கண்டறிந்திருப்பதாக அறிவித்திருக்கிறது. முந்நூறு கோடி வருடங்கள் பழைமையான இந்தக் கரிம மூலக்கூறுகளை ஒரு காலத்தில் ஏரியாக இருந்திருக்கலாம் எனக் கருதப்படும் இடத்தில் இருந்த பாறையை ஆய்வு செய்ததில் கண்டுபிடித்திருக்கிறது க்யூரியாசிட்டி ரோவர். கரிம மூலக்கூறுகள் வாழும் உயிரினத்துடன் நெருங்கிய தொடர்புடையனவாகவும், அவற்றை உருவாக்குவதில் முக்கியமானவையாகவும் கருதப்படுகின்றன.

கண்டுபிடிக்கப்பட்ட இந்த மூலக்கூறுகள் செவ்வாயில் வாழ்ந்த உயிரினங்க



ளால் தயாரிக்கப்பட்டிருக்கலாம். அல்லது உயிரினங்களுக்கு அவை உணவாகப் பயன்பட்டிருக்கலாம். இந்தப் புதிய கண்டுபிடிப்பு செவ்வாயில் தொடர்ந்து உயிரினங்களைத் தேடுவதற்கான ஊக்கத்தை அளித்திருக்கிறது. எதிர்காலத் திட்டங்கள் மூலமாக இன்னும் சிறப்பான தகவல்களைப்பெற முடியும் என்று இந்த ஆய்வில் ஈடுபட்டிருக்கும் விஞ்ஞானிகள் தெரிவித்திருக்கிறார்கள்.



# தனியார் சேவையிலிருந்து விலகும் விசேட வைத்திய நிபுணர்கள்

கொழும்பு, ஜூன் 13

எதிர்வரும் 18 ஆம் திகதியின் பின்னர் தனியார் வைத்திய சேவைகளில் இருந்து விலகுவதற்குத் தீர்மானித்துள்ளோம் என விசேட வைத்திய நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

அரசால் அமுல்படுத்தப்பட்டுள்ள புதிய வரிக்கொள்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டிருக்கின்றது என விசேட வைத்திய நிபுணர்கள் சங்கத்தின் தலைவர் வைத்தியர் சுனில் விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

புதிய வரிக் கொள்கைக்கு அமைவாக ஏப்ரல் 01ஆம் திகதி முதல் வைத்தியர்களின் வருமானத்தில் இருந்து நூற்றுக்கு 24 வீத வரி அறவிடப்படுகிறது. அதனை நூற்றுக்கு 12 வீதமாக குறைக்குமாறு விசேட வைத்திய நிபுணர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது சம்பந்தமாக நிதியமைச்சர் மங்கள சமரவீர மற்றும் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன ஆகியோருடன் விசேட வைத்திய நிபுணர்கள் சங்கம் நேற்றுமுன்தினம் பேச்சு நடத்தியுள்ளது.

இந்த கோரிக்கையை பரிசீலனை செய்வதற்கு ஒரு வருட கால அவகாசம் வழங்குமாறு நிதியமைச்சர், அவர்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதனையடுத்து பேச்சு இறுதித் தீர்வின்றி நிறைவடைந்தது என விசேட வைத்திய நிபுணர்கள் சங்கத்தின் தலைவர் வைத்தியர் சுனில் விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

தமது கோரிக்கைக்கு தீர்வு கிடைக்காவிட்டால் எதிர்வரும் 18 ஆம் திகதியின் பின்னர் தனியார் வைத்திய சேவை களில் இருந்து விலகி இருக்க தீர்மானிக்கப்பட்டிருக்கிறது என விசேட வைத்திய நிபுணர்கள் சங்கத்தின் தலைவர் வைத்தியர் சுனில் விஜேசிங்க தெரிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

(க)




# கல்விக் கதிர் வெளியீடு




## வண்ணத்துப் பூச்சியின் கடைசி ஆசை




அரச மரத்தடியில் எறும்புக் கூட்டம் ஒன்று வாழ்ந்து வந்தது. தங்களுக்குத் தேவையான உணவை மழைக்காலத்துக்கு முன்பாகவே சேர்த்து விடுவதற்காக சுறுசுறுப்பாக உழைத்துக் கொண்டிருந்தன எறும்புகள்.

அந்தப் பக்கம் வந்த வண்ணத்துப்பூச்சிக்கு எறும்புகளைக் கண்டதும் ஏனோ வம்பு இழுக்க வேண்டும் என்று தோன்றியது. தன்னுடைய அழகான இறக்கைகளை வேகமாக அடித்துக்கொண்டு பறந்தது.

திடீரென்று நிழல் படிவதையும் வேகமாகக் காற்று வீசுவதையும் கண்ட எறும்புகள் என்னவோ ஏதோவென்று நிமிர்ந்து பார்த்தன.

அட! வண்ணத்துப்பூச்சியா? நான் ஏதோ பெரிய கழுகு என்றல்லவா பயந்தேன் என்றது ஒரு சிற்றெறும்பு.

யாராக இருந்தால் நமக்கென்ன? ஏன் பயப்படணும்? நமக்கு நிறைய வேலை இருக்கு. வண்ணத்துப்பூச்சி கிட்ட அரட்டையடிக்க நேரமில்லை? என்றது மற்றோர் எறும்பு.

எறும்புகள் தன்னைக் கண்டுகொள்ளாமல் வேலையில் மூழ்கியிருந்ததைக் கண்ட வண்ணத்துப்பூச்சிக்குப் பெரிய ஏமாற்றமாக இருந்தது.

இந்த எறும்புகளுக்குத் தான் யார் என்று காட்ட வேண்டும் என்று நினைத்தது. இன்னும் கொஞ்சம் வேகமாகத் தனது இறக்கைகளை அசைத்தபடி எறும்புக் கூட்டத்துக்கு வெகு அருகில் சென்றது.

சாதாரணமாகக் காற்றடித்தாலே எறும்புகள் பறந்துவிடக்கூடியவை. வண்ணத்துப்பூச்சியின் வேகமான சிறகசைப்பு, எறும்புகளுக்குப் புயல் காற்றைப் போலிருந்தது.

எறும்புகள் நிலை தடுமாறின. கையிலிருந்த உணவுப் பொருள்களைக் கைவிட்டன. வரிசை கலைந்தது. பறந்து போய் விழுந்ததில் பல எறும்புகளுக்குக் காயம் ஏற்பட்டன. சில எறும்புகள் வேகமாகச் சென்று ராணி எறும்பிடம் முறையிட்டன. ராணி எறும்பு வண்ணத்துப்பூச்சிக்கு அருகில் வந்தது.

அழகான வண்ணத்துப்பூச்சியே, எங்களை வேலை செய்யவிடாமல் ஏன் தொந்தரவு செய்கிறாய்? இது சரியில்லையே என்று அமைதியாகவும் அன்பாகவும் சொன்னது. ஏய்! அற்ப எறும்பே! எனக்கு வேறு வேலை இல்லையா? நான் பாட்டுக்குப் பறந்து செல்கிறேன். இதில் உங்களுக்கு என்ன கஷ்டம்? என்று கிண்டலாகச் சிரித்தது வண்ணத்துப்பூச்சி.

நீ அருகில் வந்து வேகமாக உன் இறக்கைகளை அசைப்பதால் எங்களால் சரியாக நடக்க முடியவில்லை. பலருக்குக் காயம் ஏற்பட்டுவிட்டது. அதனால் நீ சற்றுத் தள்ளி உன் விருப்பம் போல வேகமாகப் பறந்து செல்லலாமே என்றது ராணி எறும்பு.

என்னது! எனக்கு நீ ஆணையிடுகிறாயா? அதெல்லாம் உன் கூட்டத்தோடு வைத்துக்கொள். நான் சுதந்திரமானவன். இங்கேதான் பறப்பேன். உன்னால் முடிந்ததைச் செய் என்றது வண்ணத்துப்பூச்சி.

தன் கூட்டத்தைப் பார்த்து, நண்பர்களே! எல்லோரும் புற்றுக்குள் வாருங்கள். சற்று ஓய்வெடுத்துவிட்டுப் பிறகு நம் வேலையைத் தொடங்கலாம் என்றது ராணி எறும்பு. எறும்புகள் அனைத்தும் புற்றுக்குள் சென்றன. பயந்துகொண்டு ஓடிவிட்டன. எனக்கே வெற்றி என்று சத்தமாகக் கூறிக் கொண்டே இன்னும் வேகமாகப் பறந்து சென்றது வண்ணத்துப்பூச்சி.

அப்போது இரையைக் குறிபார்த்து வேகமாக வந்துகொண்டிருந்த பெரிய வண்டு ஒன்று, வண்ணத்துப் பூச்சி மீது மோதிவிட்டது.

எதிர்பாராமல் நிகழ்ந்த இந்த விபத்தில் வண்ணத்துப்பூச்சி தன் இறக்கைகளை இழந்து, பொத்தென்று எறும்புப் புற்றுக்கு அருகில் விழுந்தது. வலியுடன் வண்ணத்துப்பூச்சி பறக்க முயன்றது. ஆனால், பறக்க முடியவில்லை. தொடர் முயற்சியால் சோர்வுற்றது. பாதி மயங்கிய நிலையில் அப்படியே வெயிலில் கிடந்தது.

சிறிது நேரம் கழித்து ராணி எறும்பு தனது ஒற்றர் எறும்பிடம் மேற்பரப்பின் நடமாட்டத்தைக் கண்காணித்து வரச் சொன்னது. மேலே வந்த எறும்பு, சுற்றும் முற்றும் பார்த்தது. அங்கே வண்ணத்துப்பூச்சியைக் கண்டது. அருகில் சென்று பார்த்தது. நிலைமையை உணர்ந்தது. உடனே தகவல் கூற புற்றுக்குள் விரைந்தது.

ராணியே! நம்மை பயமுறுத்திய அந்த வண்ணத்துப்பூச்சியின் இறக்கைகள் உடைந்து தனியே விழுந்துகிடக்கின்றன. அதுவும் மயங்கிய நிலையில் இருக்கிறது என்றது உளவு பார்த்த எறும்பு.

ஐயையோ – என் மனம் வேதனை அடைகிறது. வாருங்கள், நாம் ஏதாவது உதவி செய்ய முடியுமா என்று பார்ப்போம் என்று நண்பர்களை அழைத்தது ராணி எறும்பு. எறும்புகள் விரைந்தன.

ஏதாவது செய்து அந்த வண்ணத்துப் பூச்சியைக் காப்பாற்றுங்கள் என்று ஆணையிட்டது ராணி எறும்பு. எறும்புகள் உதவிச் செய்யத் துடிப்பதைக் கண்ட வண்ணத்துப்பூச்சி, தான் செய்த செயலுக்கு வருந்தியது.

எறும்புகளே, நான் உங்களைத் துன்புறுத்தினேன். ஆனாலும் என்னைக் காப்பாற்றத் துடிக்கிறீர்கள். என் தவறை உணர்ந்துவிட்டேன். நம்மைப் போன்ற பூச்சி இனங்கள் இறந்துவிட்டால் நீங்கள்தான் தூக்கிச் சென்று அடக்கம் செய்ய வேண்டும் என்பதே எனது கடைசி ஆசை என்றது வண்ணத்துப்பூச்சி.

அப்படியே ஆகட்டும் என்றது ராணி எறும்பு. அன்றிலிருந்து சகப் பூச்சிகள் இறந்தால் எறும்புகள் எல்லாம் சேர்ந்து, தூக்கிச் செல்வது வாடிக்கையாகி விட்டது.

## சிறுவர் ஆக்கங்கள்



### எங்கள் அன்பு அம்மா!

**அன்புமிக்க அம்மா!**
**அரவணைக்கும் அம்மா!!**
**உணவு தருமம் அம்மா!**
**உடைகள் தரும் அம்மா!!**
**பாசம் மிகுந்த அம்மா!**
**பாசாங்கற்ற அம்மா!!**

ஆக்கம் :– திலீப் திலக்ஷன்

### ஓநாயும் ஆடும்



ஒரு காட்டில் ஆடும் அதன் குட்டியும் ஒரு குடிலில் வாழ்ந்தன. ஒரு நாள் தாயோடு இரை தேட செல்லுமுனள் தன்குட்டியிடம் நான் வந்து "ஓநாய் அழியட்டும்'' என்ற பரிபாசையை சொன்னவுடன் நீ கதவைத் திறக்கவேண்டும் என்று சென்றது. இதனை ஒட்டுக் கேட்ட ஓநாய்தாயாயுடன்சென்றவுடனே ஓநாய் அழியட்டும் என்றது. இதைக் அகேட்ட குட்டி கதவைத் திறக்கும் முன்யோசித்தது. எங்கே உன் தாயைக் காட்டுப் பார்க்கலாம் என்றது. ஓநாய்க்கு ஏது தாடி? அது உடனே தலை குனிந்தபடி காட்டுக்குள் ஓடியது.

ஆக்கம் :– தி.கானுஜா

## நிறம் தீட்டலாம் வாங்க





### தம்பி, தங்கையரே!

காலைக்கதிரின் 'கல்விக்கதிர்' வெளியீட்டில் உங்களின் சித்திரங்கள், கவிதை மற்றும் ஆக்கங்களையும் வெளியிடவுள்ளோம். உடன் அனுப்பி வையுங்கள்.

முகவரி : 'காலைக்கதிர்' சிறுவர் சஞ்சிகைப் பிரிவு
30, கல்லூரி வீதி,
யாழ்ப்பாணம்.

# குடும்பத்தில் பெண்களுக்கு தரப்படும் உரிமையே எம் இனத்தின் விடுதலையாகத் தோற்றம் பெறும்

## அனந்தி சசிதரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 13

ஒவ்வொரு வீட்டிலும் ஆண் பெண்களுக்கு வழங்குகின்ற உரிமைகள்தான் சமூகத்தின் உரிமையாகப் பரிணமித்து நாளை எம் இனத்தின் விடுதலையாகத் தோற்றம் பெறும் என வடமாகாண மகளிர் விவகார அமைச்சர் அனந்தி சசிதரன் தெரிவித்துள்ளார்.

தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் அனுசரனையுடன், மகளிர் விவகார அமைச்சின் ஏற்பாட்டில் இடம்பெற்ற வட மாகாண பெண்கள் வலுவூட்டல் பயிற்சிப் பட்டறையும் கொள்கை வகுப்பாக்கச் செயலமர்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் அனந்தி சசிதரன் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நான் சிறு வயதிலும், குடும்ப வாழ்விலும் சம உரிமையோடு வாழ்ந்த அனுபவ ரீதியாக இதைக் கூறுகிறேன். இதுவே பெண்களின் உரிமைகள் சார்ந்து பேசக்கூடிய எண்ணப்பாங்கை எனக்குத் தோற்றுவித்திருந்தது.

குடும்பங்களில் பெண்களுக்கு அதிகளவில் ஒழுக்கங்கள் போதிக்கும் பெற்றோர் ஆண்பிள்ளைகளுக்கும் அவற்றைப் போதிக்க வேண்டும்.




அவ்வாறு இல்லாதமையால் இன்று சமூக வன்முறைகள் அதிகரிக்க இதுவும் ஒரு காரணமாகும்.

பெண்களுக்கு ஒழுக்கத்தை போதிக்கும் சமூகம் ஆண்களுக்கும் ஒழுக்கத்தைப் போதித்தால் தான் நல்ல தொரு சிறந்த சமூகக் கட்டமைப்பை உருவாக்க முடியும்.

அண்மைக்காலமாக எமது பிள்ளைகளின் பண்பாடு, கலாசாரங்களில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதை நாம் பார்க்கின்றோம். எனவே எமது கலாசாரங்களைப் போதிக்கும் வேலைத்திட்டங்களை கிராம மட்டங்களிலிருந்து அமுல்படுத்த வேண்டும். அப்போது தான் மாற்றங்களை விரைவாக ஏற்படுத்த முடியும்.



வடக்கு மாகாணத்தில் போரிற்குப் பின் பெண்கள் சமூக, பொருளாதார, அரசியல் மற்றும் கலாசார ரீதியாக பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருவதுடன் இவற்றால் மிகவும் பாதிப் படைந்துள்ளார்கள். தற்போது பெண்கள் மற்றும் சிறுவர்கள் அதிகம் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாகின்றனர்.

கடந்த காலங்களில் மகளிர் விவகாரக் கொள்கை உருவாக்கப்பட்டிருந்தாலும், தற்போது பல புதிய பிரச்சினைகள் உருவாகிக் கொண்டிருக்கின்றன. குறிப்பாகப் பெண்கள் நுண்கடன் திட்டம் மற்றும் கலாசார ரீதியான அடக்கு முறைகளுக்கும் உட்படுகிறார்கள்.

எனவே, காலத்தின் தேவை கருதி அனைத்து மாவட்டங்களிலும் உள்ள இன, மத ரீதியாக எல்லோரையும் ஒன்றிணைத்து அவர்களது கருத்துக்களை உள்வாங்கி இக்கொள்கையில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கும், இவர்களின் வாழ்வை மேம்படுத்தவதையும் நோக்காகக் கொண்டு இச் செயலமர்வை நடத்துகிறோம்.

மகளிர் விவகாரத்துக்கு நிதி மற்றும் ஆளணிப் பற்றாக்குறை இருந்தபோதும் பொருத்தமான செயற்றிட்டங்கள் ஊடாகவடக்குமாகாணத்தின் மகளிரை வலுவூட்டுகின்ற செயற்திட்டங்களை முன்னெடுப்போம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

யாழ். பொது நூலக மாநாட்டு மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற இந்த நிகழ்வில் மகளிர் விவகார அமைச்சின் செயலாளர் திருமதி ரூபினி வரதலிங்கம், தேசிய மீனவர் ஒத்துழைப்ப இயக்கத்தின் தேசிய அமைப்பாளர் ஹேர்மன் குமார, மகளிர் விவகார இராஜாங்க அமைச்சின் முன்னாள் செயலாளர் திருமதி இமெல்டா சுகுமார், பேராசிரியர் வி.ரி சிவநாதன், கலாநிதி.விஜயலக்சுமி இராசநாயகம், அமைச்சின் திணைக்களப் பணிப்பாளர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள், மாவட்ட மட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட பெண் தலைவிகள், சிவில் அமைப்புக் களின் பிரதிநிதிகள், இத் துறை சார்ந்து நிபுணத்துவம் சார்ந்தவர்கள் எனப் பலர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

# குறைந்த செலவில் நீண்டகால மின்னுற்பத்திக்கு அங்கீகாரம்

கொழும்பு, ஜூன் 12

நிபந்தனைகளின் அடிப்படையில் குறைந்த செலவில் நீண்ட கால மின் உற்பத்தி விரிவாக்கத் திட்டம் 2018 - 2037 இற்கு இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அங்கீகாரம் வழங்கியுள்ளது.

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தலைவரினால் இலங்கை மின்சார சபை தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்திலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

குறைந்த செலவில் நீண்ட கால மின் உற்பத்தி திட்டம் 2018 - 2037 தொடர்பில் நீண்ட கலந்துரையாடலின் பின்னர் கடந்த வருடம் ஜூலை மாதம் இலங்கை மின்சார சட்டம் 43 (8) இன் அடிப்படையில் இலங்கை மின்சார சபைக்கு அறிவிக்கப்பட்டது.

சுற்று சூழலுக்கு மின் பிரபாக்கியால் வெளியிடப்படும் காபன் அளவு, இயலுமானவரை மின்னுற்பத்தி செலவை மிகக் குறைந்தளவில் பராமரித்தல், எதிர்காலத்தில் மின்னுற்பத்தியில் தன்னிறைவு காணுதல் மற்றும் மரபு சார் புதுப்பிக்கத்தக்க மின் உற்பத்தியை அதிகரித்தல் என்பன இத்திட்டதில் பிரதான மாகக் கவனத்தில் கொள்ளப்படவுள்ளன.

இருப்பினும், நீண்டகால மின்னுற்பத்தி விரிவாக்க திட்டம் சமர்ப்பிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் அது அரச கொள்கைகளுடன் உடன்பட்டதாகக் காணப்படவில்லை.

எனினும், இந்த வருடம் மே மாதம் அதற்கான அங்கீகாரத்தை அமைச்சரவை வழங்கியிருந்தது. எனவே அமைச்சரவை இதனை அங்கீகரித்தன் பிரகாரம் பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழுவும் அரச கொள்கைகள் பிரகாரம் இதற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நோன்புப் பெருநாள்

யாழ். ஜின்னா மைதானத்தில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை 17 ஆம் திகதி நோன்புப் பெருநாள் தொழுகையும் ஜும்மா பிரசங்கமும் இடம் பெறவுள்ளன.

யாழ்.முஸ்லிம் வட்டாரத்திலுள்ள அனைத்து பள்ளிவாசல்களின் நிர்வாகிகளின் கூட்டம் கடந்த திங்கட்கிழமை மாலை மஸ்ஜித் முஹம்மதியாவில் நடைபெற்றபோது இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

பள்ளிவாசல் நிர்வாகம் சார்பில் பின்வருவோர் சமூகமளித்தமையுடன் பொறுப்புக்களும் அவர்களுக்கு வழங்கப்பட்டன:- நிர்வாக தலைவர்களான எஸ்.ஏ.சி. முபீன், எம்.எல். லாபீர், எஸ்.எச்.பிர்தவ்ஸ், ஏ.எச்.ஜமால் மொஹிடீன், பி.எஸ்.எம்.சரப், ஏ.சி.எம். மகனாஸ், ஐ.எல். நிராஸ், ஏ.எம்.நஜாத், எச்.எம். சினாஸ், எம்.எம். கமால் மற்றும் எம்.ஏ.ஜமால்தீன் ஆகியோர்கள்.

யாழ். பஜார் (பெரிய கடை) ஜும்மா பள்ளியிலும், மரியம் பள்ளிவாசலின் பெருநாள் தொழுகையும் யாழ். முற்றவெளிப் பகுதியிலும் இடம்பெறவுள்ளன.

மௌலவி அப்துல் அஸிஸ் பெருநாள் தொழுகையையும் மௌலவி மன்சூர் (பெரிய பள்ளிவாசல்) பிரசங்கத்தையும் நிகழ்த்துவார்கள். (உ-19)

# தமிழகத்தில் மஹிந்த ராஜபக்ஷவின் முகவர்களாக செயல்படுபவர்கள் யார்?

## பொன். இராதாகிருஷ்ணன் கேள்வி

தமிழகத்தில் ராஜபக்ஷவின் முகவர்களாகச் செயற்படுபவர்கள் யார்? என இந்திய மத்திய அமைச்சர் பொன். இராதா கிருஷ்ணன் கேள்வி எழுப்பியுள்ளார்.

தமழகத்தில் நாகர் கோவிலில் நேற்று காலை ஊடகவியலாளர்களிடம் பேசும்போதே இதைக் கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

கன்னியாகுமரியில் புதிய துறைமுகம் ஒன்று அமைக்கப்பட உள்ளது. துறைமுகம் அமைக்கும் போது குமரி மாவட்ட இயற்கை வளங்கள் பாதுகாக்கப்படும்.

எனினும் நமக்கு துறைமுகம் அமைந்தால் இலங்கைத் துறை முகம் பாதிக்கும். எனவே, துறைமுகத்தை எதிர்த்து ராஜபக்ஷவின் ஏஜெண்டுகளாகச் சிலர் செயல்படுகிறார்கள்.

யார் எம்.பிக்களை அழைத்துச் சென்று ராஜபக்ஷவைச் சந்திக்க ஏற்பாடு செய்தார்களோ, யார் ஒன்றரை இலட்சம் தமிழர்களைக் கொன்று தமிழினத்திற்கு துரோகம் செய்தார்களோ, அவர்கள்தான் ராஜபக்ஷவின் ஏஜெண்டுகள்.



மேலும், நான்காண்டுகளாக மோடி அரசு செய்துள்ள சாதனைகளை மக்களிடம் கொண்டு செல்ல வேண்டும் எனவும் அமைச்சர்களையும், எம்.பிக்களையும் பொன். இராதாகிருஷ்ணன் கேட்டுக் கொண்டுள்ளார்.

## வரலாற்றில் முதன்முறை:

# உலகமே வியந்து பார்த்த கிம் – டிரம்ப் சந்திப்பு!

சிங்கப்பூர் சிற்றி, ஜுன் 13

வட கொரியாவும், அமெரிக்காவும் ஜென்ம எதிரிகளாக கருதப்பட்டு வந்த நிலையில் அதன் தலைவர்கள் கிம் – ட்ரம்ப் இருவரும் சிங்கப்பூரில் நேற்று நேரில் சந்தித்துப் பேசினர்.

இந்த வரலாற்று சிறப்புமிக்க நிகழ்வை பதிவு செய்ய உலகம் முழுவதும் இருந்து 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பத்திரிகையாளர்கள் திரண்டனர். உலகின் பல நாடுகளிலும் இந்தச் சந்திப்பு நிகழ்ச்சி பெரிய திரைகளில் நேரலையாக ஒளிபரப்பானது.





வடகொரியா தொடர்ந்து அணு ஆயுத சோதனை நடத்தி வந்தது. இதனால் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்புக்கும் வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன்னுக்குமிடையே கடும் வார்த்தைப் போர் இடம்பெற்றது.

வடகொரியா மீது பொருளாதார தடைகள் விதிக்கப்பட்டன. இந்த நிலையில், ட்ரம்பை சந்திக்க கிம் விருப்பம் தெரிவித்தார். இதையடுத்து ஜுன் 12 இல் (நேற்று) சிங்கப்பூரில் இருவரும் சந்திக்க ஏற்பாடு செய்யப்பட்டது.

இதன்படி, வடகொரிய தலைநகர் பியாங்யாங்கில் இருந்து ஜனாதிபதி கிம் ஜாங் உன், 'ஏர் சீனா' விமானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை சிங்கப்பூர் சென்றடைந்தார். பின்னர் அந்நாட்டு பிரதமர் லீ சியன் லூங்கை ஜனாதிபதி கிம் சந்தித்துப் பேசினார்.

இதுபோல, சிங்கப்பூருக் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு 9 மணிக்கு வந்த டொனால்ட் ட்ரம்ப், அங்குள்ள ஷாங்கிரி–லா ஹோட்டலில் தங்கினார்.

**வரலாற்றில் முதன்முறை**

இதைத்தொடர்ந்து, ஜனாதிபதி ட்ரம்பும் ஜனாதிபதி கிம்மும் சென்டோசா தீவில் உள்ள கேபெல்லா ஹோட்டலில் நேற்று சந்தித்தனர். இரு நாடுகளும் ஜென்ம எதிரிகளாக வர்ணிக்கப்பட்ட நிலையில் அதன் தலைவர்கள் சந்தித்து கொள்வதை உலகம் முழுவதும ஆவலுடன் எதிர்பார்த்து காத்திருந்தனர்.

அதன்படி, நேற்றுக் காலை இருதலைவர்களும் முதலில் தனியாக நேருக்கு நேர் சந்தித்து கைகுலுக்கினர். வசை பாடிய வர்கள் நேரில் சந்தித்து கொண்டதால் இருவரிடையே சிறிது நேரம் தர்மசங்கடம் நிலவியது.

**அதன் பிறகு இருவரும்**

சிறிது நேரம் கைகுலுக்கினர். பின்னர் இருவரும் செய்தியாளர்களுக்குக் கூட்டாக 'போஸ்' கொடுத்தனர். உலகம் முழுவதும் இருந்து வந்திருந்த 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பத்திரிகை, ஊடகவியலாளர்கள் இந்த காட்சியைப் படம் பிடித்தனர்.

உலக நாடுகள் உற்று நோக்கிய இந்தச் சந்திப்பு சுமார் 48 நிமிடங்கள் நீடித்தது. இந்த சந்திப்பின் போது, அணு ஆயுத கைவிடல், பொருளாதார பிரச்சினை ஆகியவை குறித்து இரு தலைவர்களும் ஆலோசனை நடத்தினர். சந்திப்புக்குப் பிறகு, பால்கனியில் வந்து இரு தலைவர்களும் செய்தியாளர்களை பார்த்து கையசத்தனர்.

**வியந்து பார்த்த உலகம்**

வடகொரியா– அமெரிக்கா ஆகிய நாடுகளின் தலைவர்கள் சந்தித்துக்கொண்டதை உலகமே உற்று நோக்கியது. பல நாடுகளில் உள்ள தொலைக் காட்சிகள், இணையதள செய்தி நிறுவனங்கள், அதிக முக்கியத்துவத்துடன் இருநாட்டு தலைவர்களின் சந்திப்பை வெளியிட்டன. கிம் – ட்ரம்ப் சந்திப்பை வடகொரியா மக்களும் மிகுந்த ஆர்வத்துடன் தொலைக்காட்சிகளில் பார்த்தனர்.

வடகொரியாவின் தலை நகரான பியாங்யாங்கில் உள்ள ரயில் நிலையத்தில், பிரம்மாண்ட டிஜிட்டல் திரை அமைக்கப்பட்டு வடகொரிய ஜனாதிபதியின் செயற்பாடுகள் நேரலையாக ஒளிபரப்பு செய்யப்பட்டன.

ட்ரம்ப், கிம் தங்கியுள்ள ஹோட்டல்கள், அவர்கள் சந்தித்துப் பேசும் ஹோட்டல் உட்பட சிங்கப்பூர் முழுவதும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. உலக நன்மை கருதி இரு தலைவர்களின் சந்திப்புக்காக ரூ.135 கோடி செலவிடப்படுகிறது என சிங்கப்பூர் அரசு தெரிவித்துள்ளது.

உலகமே உற்றுநோக்கிய இந்த சந்திப்பின்போது அணு ஆயுத ஒழிப்பு, பொருளாதார தடை உள்ளிட்ட விவகாரங்கள் குறித்து பேசப்பட்டது.

இந்தச் சந்திப்பு எதிர்பார்த்ததைவிட சிறப்பாக அமைந்தது என்றும், மிகப்பெரிய பிரச்சினைகளைத் தீர்க்க முடியும் என்றும் ட்ரம்ப் நம்பிக்கை தெரிவித்தார். இதேபோல் கிம் ஜாங் உன்னும் சாதகமான கருத்தையே கூறியுள்ளார்.

அதன்பின்னர், இரு நாடுகளிடையே முக்கிய ஒப்பந்தம் கையெழுத்தானது. இதில், ட்ரம்ப், கிம் ஜாங் உன் இருவரும் கையெழுத்திட்டனர். இந்த ஒப்பந்தத்தில் உள்ள அம்சங்கள் குறித்த தகவல் வெளியாகவில்லை. ஆனால், அமைதி மற்றும் நட்புறவு தொடர்பாக தொடர்ந்து பேச்சு நடத்துவதற்கான ஒப்பந்தமாக இருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# வடகொரிய ஜனாதிபதியுடன் செல்பி எடுத்து மகிழ்ச்சியை வெளியிட்ட சிங்கப்பூர் மக்கள்!

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பை சந்திக்கச் சென்ற வட கொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன்னுடன், சிங்கப்பூர் மக்கள் செல்பி எடுத்து மகிழ்ந்து அதை சமூக வலைத்தளங்களில் பதிவிட்டு வருகின்றனர்.

சிங்கப்பூர் சென்றிருந்த வட கொரியா ஜனாதிபதி கிம் ஜாங் உன் அங்குள்ள முக்கிய சுற்றுலா தளங்களைச் சுற்றிப் பார்த்தார்.

மெரினா பே என்ற பகுதிக்கு சென்றிருந்த கிம் ஜாங் உன்னை பொதுமக்கள் ஆர்வமுடன் சந்தித்து செல்பி எடுத்து மகிழ்ந்தனர்.

பின்னர் இஸ்பலாண்டே என்ற பகுதிக்கு சென்ற கிம் ஜாங்கை அதிகாரிகள் வரவேற்றமையுடன் அவருடன் செல்பி எடுத்து மகிழ்ந்தனர். அதன் புகைபடங்கள் சமூக வலைத்தளங்களில் வைரலாகப் பரவி வருகிறது.



கிம் ஜாங் உன்னுடன் செல்பி எடுத்து மகிழ்ந்த சிங்கப்பூர் வெளியுறவு அமைச்சர் விவியன் பாலகிருஷ்ணன் தனது டுவிட்டர் பக்கத்திலும் பதிவேற்றியுள்ளார்.

# சிரியாவில் அரசு படைகளின் வான்தாக்குதலில் 16 பேர் பலி: ஐ.நா. பொதுச் செயலாளர் கவலை!

சிரிய அரசு படைகளின் வான் தாக்குதலில் 16 பேர் பலியான சம்பவம் தொடர்பாக ஐ.நா. பொதுச் செயலாளர் ஆன்டனியோ குட்டரெஸ் ஆழ்ந்த கவலை தெரிவித்துள்ளார்.

சிரியாவில் பல்வேறு கிளர்ச்சியாளர்களுக்கும், அரசு படைகளுக்கும் இடையே கடந்த 2011ஆம் ஆண்டு முதல் உள்நாட்டுப்போர் நடந்து வருகிறது. அங்குள்ள இட்லிப் மாகாணத்தின் பெரும்பாலான பகுதிகளை கிளர்ச்சியாளர்கள் தங்கள் வசம் வைத்துள்ளனர்.

இந்த மாகாணத்தின் பின்னிஷ், ராம் ஹம்தோன், டப்தனாஸ் கிராமங்களை குறிவைத்து கடந்த ஞாயிறு சிரிய அரசு படைகள் வான்வழி தாக்குதலை அரங்கேற்றின. சுமார் 2 மணி நேரமாக நீடித்த இந்த தாக்குதலில் வீடுகள், மருத்துவமனைகள் உள்ளிட்ட ஏராளமான கட்டடங்கள் இடிந்து தரை மட்டமாயின.

இந்த கொடூர தாக்குதலில் ஒரு இளம் பெண் உள்பட 16 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். மேலும், 18 பேர் படுகாயங்களுடன் சிகிச்சை பெற்று வருகின்றனர். முன்னதாக கடந்த 8 ஆம் திகதி இந்த மாகாணத்தில் ரஷ்ய படைகள் நடத்திய வான்தாக்குதலில் 44 பேர் உயிரிழந்த சம்பவம் அங்கு சோகத்தை ஏற்படுத்தி இருந்தது.

சிரிய அரசு படைகளின் இந்த வான் தாக்குதல் தொடர்பாக ஐ.நா. பொதுச்செயலாளர் ஆன்டனியோ குட்டரெஸ் ஆழ்ந்த கவலை தெரிவித்துள்ளார்.

இட்லிப் மாகாணம் போர் நிறுத்த பகுதியாக அங்கீகரிக்கப்பட்டு இருக்கும் நிலையில், அந்த ஒப்பந்தத்துக்கு உறுதியேற்றவர்கள், தங்கள் பொறுப்புடைமையை உறுதி செய்ய வேண்டும் என்று அவர் கூறியுள்ளார்.

## உலகம் இனி மிகப்பெரிய மாற்றத்தை பார்க்கும்: வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன் நம்பிக்கை!

சிங்கப்பூர், ஜுன் 13

உலகம் இனி மிகப்பெரிய மாற்றத்தை பார்க்கும் என்று அமெரிக்காவுடனான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட வடகொரிய தலைவர் கிம் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

ட்ரம்ப் – கிம் சந்தித்துப் பேச்சு நடத்தினர். உலகமே உற்று நோக்கிய இந்த சந்திப்பின் போது அணு ஆயுத ஒழிப்பு, பொருளாதார தடை உள்ளிட்ட விவகாரங்கள் குறித்து பேசப்பட்டது.

இந்த பேச்சின் முடிவில் இரு நாடுகளிடையே முக்கிய ஒப்பந்தம் கையெழுத்தானது. இதில், ட்ரம்ப், கிம் இருவரும் கையெழுத்திட்டனர். அதன் பின்னர் இருவரும் கூட்டாக செய்தியாளர்களை சந்தித்தனர்.

அப்போது, கிம் பேசுகையில்–

இது வரலாற்று சிறப்புமிக்க சந்திப்பு. இந்தச் சந்திப்பு சிறப்பாக நடப்பதை உறுதிசெய்த அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்புக்கு நன்றி தெரிவிக்கிறேன்.

கடந்த காலங்களில் நடந்தவற்றை மறக்க நாங்கள் முடிவு செய்துள்ளோம். அதற்காக முக்கியத்துவம் வாய்ந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளோம். இனி உலகம் மிகப்பெரிய மாற்றத்தை பார்க்கும்.– என்று கிம் கூறினார்.

ட்ரம்ப் பேசுகையில் –

வடகொரிய தலைவர் கிம்மை அமெரிக்காவின் வெள்ளை மாளிகைக்கு வரும்படி அழைப்பேன். பேச்சு தொடர்பான விரிவான விவரங்களை மாலை 4 மணிக்கு பத்திரிகையாளர் சந்திப்பில் தெரிவிக்க உள்ளேன்.– என ட்ரம்ப் கூறியுள்ளார்.

# வவு. வடக்கில் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பின் சிங்கள குடியேற்றங்கள் இடம்பெறவில்லை

## வடமாகாண சபை உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன் தெரிவிப்பு

வவுனியா, ஜூன் 13

மஹிந்த ராஜபக்ஷ, பஸில் ராஜபக்ஷ, நாமல்ராஜபக்ஷமூன்றுபேரின்பெயரைப் பயன்படுத்தி அவசர வேலைத்திட்டம் ஒன்றை முன்னெடுத்தனர். இதன் போது தான் கிட்டத்தட்ட 3 ஆயிரம் பேர் வரை அம்பாந்தோட்டை, மாத்தறைப் பகுதி களில் இருந்து கொண்டுவரப்பட்டு வவு னியா வடக்கில் குடியேற்றினார்கள்.

இராணுவத்தையும், ஆளுநரையும் தவிர எவரும் அங்குபோக முடியாது. ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பின்னர் உண்மை யில் குடியேற்றங்கள் இடம்பெறவில்லை என வடமாகாண சபை உறுப்பினர் ஜி.ரி. லிங்கநாதன் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் ஆதர வுடன் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பின்னர் கூட திட்டமிட்ட குடியேற்றங்கள் விஸ்த ரிக்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக நீங் கள் பிரதிநிதித்துவப்படும் வவுனியா வடக் கில் கூட குடியேற்றங்கள் தோற்றம் பெற் றுள்ளன.

இதனைத் தடுக்கக் கூட்டமைப்பும், வடக்கு மாகாண சபையும் என்ன நட வடிக்கை எடுத்துள்ளது என ஊடகவி யலாளர் ஒருவர் கேள்வி எழுப்பியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரி வித்தவை வருமாறு:-

வவுனியா வடக்குப் பிரதேசத்தின் நிலம் பறிபோகும் விடயம் நேற்று இன்று நடந்த விடயம் அல்ல. 1970 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் 1000 ஏக்கர் திட்டம் ஒன்றை அப்போதைய அரசு உருவாக்கி வெலி ஓயா (அப்போதைய மணலாறு) பகுதியில் 10 பெரிய கம்பனிகளுக்கு வழங்கியது.

சிலோன் ரியட்டர் பாம், ஹென்பாம், டொலர் பாம், காக்கா போர், ஆர்பிஜி என்று அவை நீண்டு செல்கிறது. அந்தக் காணிகள் கொழும்பில் இருந்த தமிழ் தனவந்தர்களுக்கு வழங்கப்பட்டன. அவர்கள் இங்கு வந்து அதனைப் பண் ணையாகச் செய்து வந்தார்கள்.

அந்த நேரத்தில்தான் 1977 ஆம் ஆண்டு கலவரம் ஏற்பட்டது. கலவரத் தின் போது தென்னிலங்கையில் இருந்து வந்த தமிழ் மக்களையே அங்கு கொண்டு சென்று குடியேற்றினார்கள். பிறகு 1983 ஆம் ஆண்டு நடைபெற்ற கலவரத்துடன் அந்த மக்கள் அடித்து விரட்டப்பட்டார் கள்.

அந்த மக்கள் இன்றும் அகதிகளாக இந்தியா உள்ளிட்ட பல பகுதிகளிலும் உள் ளனர். அதன் பின்னர் யுத்தக் கைதிக ளாக இருந்த சிங்களக் கைதிகளை கொண்டுவந்து அங்கு குடியேற்றினார்கள்.

சிங்கள கைதிகளைப் பலவந்தமாகக் கொண்டு வந்து குடியேற்றிய இடம் தான் இன்றைய வெலிஓயா. பிறகு காலத் திற்குக் காலம் அது அதிகரித்து விடுத லைப் புலிகளுக்கும், இராணுவத்திற்கும் இடையில் யுத்தம் நடைபெற்றபோது எல்லைப் புறங்களில் இருந்தவர்கள் மாத்திரம் மாறி மாறி இடம்பெயர்ந்த னர்.

இதனால் கிட்டத்தட்ட பல ஆண்டுகளாக வாழ்ந்த பூர்வீக கிராமங்கள் பல அங்கு உருவாக்கிவிட்டன. 2009 இற்கு பிற்பாடு வடக்கில் வடக்கின் வசந்தம், கிழக்கில் கிழக்கின் உதயம் என்ற பெயரில் மஹிந்த ராஜபக்ஷ, பஷில் ராஜபக்ஷ, நாமல் ராஜபக்ஷ மூன்று பேரின் பெயரைப் பயன்படுத்தி அவசர வேலைத் திட்டம் ஒன்றை முன்னெடுத்தார்கள்.

இதன்போது தான் கிட்டத்தட்ட 3000 பேர் வரையில் அம்பாந்தோட்டை, மாத் தறை பகுதியிலில் இருந்து கொண்டுவந்து வவுனியா வடக்கில் குடியேற்றினார் கள்.

இராணுவத்தையும், ஆளுநரையும் தவிர எவரும் அங்கு போக முடியாது. ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பின்னர் உண் மையில் குடியேற்றங்கள் இடம்பெற வில்லை. மகாவலி அதிகார சபையின் கட்டுப்பாட்டில் அந்த இடங்கள் இருந்தா லும் அந்த மக்களே தற்போது கஷ்டத் தில் இருக்கின்றார்கள். அவர்களும் பல பிரச்சினைகளைச் சொல்கிறார்கள்.

மாகாண சபையில் காலத்திற்குக் காலம் இந்த விடயங்களை நாம் கொண்டு வந்துள்ளோம். எந்தவொரு நாடாளு மன்ற உறுப்பினரும் நாடாளுமன்றத் தில் இதை ஆதாரபூர்வமாகச் சுட்டிக்காட் டவில்லை.

அண்மையில் முல்லைத்தீவு மாவட் டத்திற்கு 22 மாகாண சபை உறுப்பினர் கள் சென்றிருந்தோம். அங்குள்ள நில மைகளை ஆராய்ந்து வடக்கு மாகாணத் தில் உள்ள மாகாண சபை உறுப்பினர் களும், நாடாளுமன்ற உறுப்பினர்க ளும் இணைந்து உடனடியாக ஒரு செயலணி போடுவதாகத் தீர்மானித் தோம்.

இதன்படி மாகாண சபை உறுப்பினர் கள் 8 பேரும், இன்னும் 3 - 4 பேர் கொண்ட குழுவும் இணைந்து இந்தக் குடியேற்றங்களை எவ்வாறு தடுப்பது, இல்லாமல் செய்வது என்பது குறித்து கூடி ஆராயவுள்ளோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

(க-100)

# அரசை மட்டுமல்லாது அரச தலைவர்களையும் விமர்ச்சிக்கக்கூடிய சுதந்திரம் நாட்டில் உண்டு

## கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 13

அரசை மாத்திரமல்லாது அரச தலைவர்களையும் விமர்ச்சிக்கக் கூடிய சுதந்திரம் நாட்டில் இருக்கி றது எனக் கல்வியமைச்சர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்துள் ளார்.

குருநாகல் - இப்பாகமுவ மத்திய மகா வித்தியாலயத்தில் புதிய தொழில்நுட்பக் கட்டடத் தொகுதி யைத் திறந்து வைக்கும் நிகழ்ச்சியில் அமைச்சர் உரையாற்றினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

மக்களுக்கான உறுதி மொழிகளை நிறைவேற்றி, ஊடகசுதந்திரத்தையும் ஜனநாயகத்தையும், நல்லாட்சி யையும் நிலைநாட்ட அரசால் முடிந் துள்ளது .

முன்னைய அரசின் ஆட்சிக் காலத் தில் அரசையோ, அரச தலைவர் களையோ விமர்ச்சித்தவர்கள் வெள்ளை வான்களில் கடத்தப்பட் டார்கள். இந்த நிலைமை இன்று இல் லையென்றும் அமைச்சர் கூறினார்.

(க)



வரலாற்று சிறப்பு மிக்க வவுனியா சாஸ்திரி கூழாங்குளம் சிவபுர சுந்தரேஸ் வரி சமேத சுந்தரேஸ்வர தேவஸ்தான வருடாந்த மகோற்சவம் நேற்று முன்தினம் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

10 நாள்கள் தொடர்ந்து நடைபெறும் திருவிழா 20 ஆம் திகதி தீர்த்த திருவிழாவுடன் விழா நிறைவு பெறும். (க-100)

### வவுனியா புதூர் நாகதம்பிரான் ஆலயத்தில்

# பொங்கல் உற்சவத்தின்போது காட்சியளித்த வெள்ளைநாகம்



வவுனியா, ஜூன் 13

வவுனியா, புதூர் நாகதம்பிரான் ஆல யத்தின் வருடாந்தப் பொங்கல் உற்ச வத்தின்போது வெள்ளை நாகம் காட்சி கொடுத்து பக்தர்களை மெய் சிலிர்க்க வைத்தது.

400 ஆண்டுகள் பழமை வாய்ந்த வன்னி மண்ணின் புகழ்மிகு புதூர் நாகதம்பிரான் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் நிகழ்வு கடந்த திங்கட் கிழமை இடம்பெற்றது.

இதில் நாட்டின் பல்வேறு பகுதி களிலும் இருந்து வருகை தந்த பல்லா யிரக்கணக்கான பக்தர்கள் நாகதம் பிரானின் அருளைப் பெற்றார்கள்.

விஷம் தீண்டியார்களுக்கு மருந்து வழங்கும் புதூர் நாகதம் பிரான் ஆலய பொங்கல் நிகழ்வு நடைபெற்ற போது இரவு வேளையில் ஆலயத்தில் வெள்ளை நாகம் தோன்றி பக்தர்க ளுக்கு அருள் பாலித்தது.

இதன்போது பக்தர்கள் பால், முட்டை போன்றவற்றைப் படைத் தும், அதனைப் புகைப்படம் எடுத்தும் மெய்சிலிர்க்க வழிபட்டனர்.

சில நிமிடங்கள் அங்கு காட்சி கொடுத்த வெள்ளை நாகம் பின்னர் அங்கிருந்து சென்று விட்டது. இதன் போது அடியவர்கள் பக்தி பரவசத் தில் நாகத்தினை வழிபட்டனர்.

(க-100)

# தங்க பிஸ்கட்களுடன் நபர் ஒருவர் கைது!

கொழும்பு, ஜூன் 13

சட்ட விரோதமான முறையில் ஒரு தொகை தங்க பிஸ்கட்டை இலங்கைக்குக் கடத்திவர முயன்ற இலங்கைப் பிரஜையொருவரை கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து சுங்க அதிகா ரிகள் கைது செய்துள்ளனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட் டவர் கல்முனையைச் சேர்ந்த 39 வயதானவராவார்.

இந்த நபர் சுமார் பத்து வருடமாக கட்டாரில் அரச துறையில் கட மையாற்றியவர் என விசாரணை களில் இருந்து தெரியவந்துள் ளது.

நேற்று அதிகாலை 2.45 மணி யளவில் கட்டாரிலிருந்து கட்டு நாயக்கா வந்த 668 என்ற விமா னம்மூலம் இந்த நபர் இலங்கைக்கு வந்துள்ளனர்.

இந்த நபரிடமிருந்து 291.55 கிராம் தங்க பிஸ்கட்டுகளை மீட் டுள்ளன. இவ்வாறு மீட்கப்பட்ட தங்க பிஸ்கட்டுகளின் பெறுமதி சுமார் 17 லட்சத்து 49 ஆயிரத்து 300 ரூபாவெனவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## தனியாக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) சர் நளின் பண்டார தெரிவித்துள்ளார்.

பொது நிர்வாகம், முகாமைத்துவம் மற்றும் சட்டம் ஒழுங்கு பிரதியமைச்சராக, நளின் பண்டார நேற்றுப் பதவியேற்றுக் கொண்டார். அதன் பின்னர் செய்தியாளர்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற் கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

அரசிலிருந்து வெளியேறிய 16 உறுப்பினர்களின் வெற்றிடத்திற்கே நாம் நியமிக்கப்பட்டுள்ளோம். புதிதாக ஒரு அமைச்சுக்கூட உருவாக்கப்படவில்லை. எனினும், சில ஊடகங்கள் இதனைத் தவறாகச் சித்தரிக்கின்றன.

ஜனாதிபதியும் பிரதமரும் சிறப்பாகச் செயற்பட்டே இந்த நியமனங்களைத் தற்போது வழங்கியுள்ளனர். இதனூடாக சிரேஷ்ட உறுப்பினர்களுக்கும் பதவிகள் வழங்கப்பட்டுள்ளமை சிறப்பான ஒன்றாகவே கருதப்படுகிறது. அத்தோடு, கடந்த காலத்தில் சிறப்பாகச் செயற்பட்ட வர்களுக்கும் பதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

அனைவருடனும் கலந்தாலோசித்தே இந்தப் பதவிகளை வழங்கியுள்ளோம் என்பதையும் கூறிக்கொள்ள வேண்டும். இதில் எந்தவொரு சிக்கலும் இல்லை. பதவி கொடுத்தாலும் இல்லையென்றாலும் நாம் மக்களுக்கான சேவையை தொடர்ந்தும் முன்னெடுப்போம். மக்கள் சேவைக்குப் பதவிகள் அவசியமில்லை.

ஐக்கிய தேசியக் கட்சி தனித்து ஆட்சியமைக்க வேண்டுமென்பது கட்சியின் பெரும்பாலானவர்களின் எதிர்பார்ப்பாக உள்ளது. எனினும், எஞ்சியுள்ள ஒன்றரை வருட காலத்தில் ஜனாதிபதியுடன் இணைந்து எமது செயற்றிட்டங்களை முன்னெடுத்துச் செல்வோம். இன்னும் இரண்டு மூன்று மாதங்களில் பல முக்கிய வேலைத்திட்டங்களை முன்னெடுக்க எதிர்பார்த்துள்ளோம். – என்றார். (ஐ)

## வடக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) யேற்றச் செயலணி, வடக்கு அபிவிருத்திக் குழு என்பன குறித்து கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

வடக்குமாகாண அபிவிருத்தி என்பது மாகாண சபையும் மத்திய அரசும் இணைந்து பேசிச் செய்யவேண்டும். அதனை விடுத்து மாகாண அரசைப் புறந்தள்ளி வெறுமனே மத்திய அரசு தாம் நினைத்ததுபோன்று செயற்பட முடியாது. இங்கு மாகாண சபை உள்ளபோதும் எங்களுக்குத் தெரியாமலே மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது. அதனை ஊடகங்களில் பார்த்தே நாங்கள் அறிந்து கொள்ளும் நிலையும் இருக்கின்றது.

இவ்வாறு மத்திய அரசு செயற்படுவது நல்லாட்சி அல்ல. அதுவொரு ஜனநாயகமும் அல்ல. ஆகவே மாகாண சபையைப் புறந்தள்ளி மத்திய அரசு செயற்படுவதை மீள்பரிசீலனை செய்யவேண்டும். – என்றார். (ஐ-7)

## சட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் கூட்டு எதிரணி வேட்பாளராகக் கோட்டாபய ராஜபக்ஷ களமிறங்குகின்றமையை அமெரிக்காவும் மேற்குலகும் அடியோடு விரும்பவில்லை என்ற தகவலைக் கொழும்புக்கான அமெரிக்கத் தூதுவராகப் பணியாற்றி, சேவை முடிந்து நாடு திரும்பும் அதுல் கெஸாப் நேரடியாக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் தெரிவித்துவிட்டார் என்பது தெரிந்ததே.

கோட்டாபய ராஜபக்ஷ அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் குதிப்பதாயின் அவரின் இலங்கை – அமெரிக்க இரட்டைப் பிரஜாவுரிமையில், அமெரிக்கப் பிரஜாவுரிமையை அவர் தேர்தல் வேட்புமனு நியமனத்துக்கு முன்னர் சட்ட ரீதியாக துறக்க வேண்டும்.

ஆனால், அதற்கு அமெரிக்கா அனுமதிக்காது என்ற சாரப்பட அமெரிக்கத் தூதுவரினால் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு சூசகமாகக் கோடி காட்டப்பட்டதாகவும் செய்திகள் வெளியாகியிருந்தன.

இந்தத் தகவலை அடுத்து ராஜபக்ஷ குடும்பத்தவர்கள் அதிர்ச்சியில் ஆழ்ந்திருக்கிறனர் என்றும், மாற்று ஏற்பாடுகள் குறித்து அவர்கள் ஆராய்கின்றனர் என்றும் கூறப்பட்டது.

குறிப்பாக, கோட்டாபய ராஜபக்ஷ கடந்த ஞாயிறு இரவு மஹிந்த – கெஸாப் சந்திப்பின் பின்னர் அங்கு பேசப்பட்ட விடயங்கள் குறித்துக் கிடைத்த தகவலைத் தொடர்ந்து, சட்ட நிபுணர்களை அழைத்து பல சுற்று ஆலோசனைகளை நடத்தினார் எனத் தெரிகின்றது.

மிக விசேடமாகத் தமக்கு மிக நெருக்கமான இஸ்லாமியரான ஜனாதிபதி சட்டத்தரணி ஒருவரை அவர் அழைத்து ஆலோசனை நடத்தியிருக்கின்றார்.

தமது அமெரிக்கப் பிரஜாவுரிமையை விரைந்து விலக்குமாறு உத்தரவிடக்கோரி கோட்டாபய அமெரிக்க நீதிமன்று எதிலும் அமெரிக்க அரசுக்கு எதிராக மனுச் செய்யலாமா என்பது குறித்தும் பரவலாகப் பேசப்பட்டது.

ஆனால் அத்தகைய வழக்குத் தொடரப்பட்டால், புலம்பெயர் தமிழர்களின் அமைப்புக்கள் பல அதில் இடையீட்டு மனுக்களைத் தாக்கல் செய்து, கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிரான யுத்தக் குற்றச்சாட்டுகள் இருக்கின்றன என்று காட்டி, சட்டக் குழப்பங்களை ஏற்படுத்தி, காலத்தை இழுத்தடித்து, வழக்கை கோட்டாவுக்கு எதிராகத் திருப்பக் கூடும் என்றும் சில வட்டாரங்கள் கூறுகின்றன.

அமெரிக்கப் பிரஜாவுரிமையை துறப்பது தொடர்பான விண்ணப்பத்தை உரிய தரப்புக்கு சமர்ப்பித்து விட்டு, அதனடிப்படையில் தமக்கு நியாயம் உரிய காலத்தில் கிடைக்கவில்லை எனத் தெரிவித்து, இலங்கை நீதிமன்றம் ஒன்றில், இலங்கைத் தேர்தலில் போட்டியிடுவதற்காகத் தனது உரிமையை நிலைநாட்டுவதற்காக வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்து அவர் நிவாரணம் பெறலாமா என்பது குறித்தும் பரிசீலிக்கப்படுவதாகக் கூறப்பட்டது.

இது விடயத்தில் தேர்தல் அதிகாரிகளின் கருத்து மற்றும் ஆலோசனைகளைப் பெறுவதற்கும் கோட்டாபய தரப்பு முயல்கின்றது எனவும் தெரிவிக்கப்பட்டது.

இலங்கையின் ஜனாதிபதியைத் தீர்மானிக்கும் தேர்தல் ஒன்றில் அமெரிக்கா போன்ற வெளிநாடு ஒன்று தன்னுடைய தீர்மானத்தை – செல்வாக்கை – நேரடியாகச் செலுத்துவதற்கு அனுமதிக்கக்கூடாது, அவ்வாறு செல்வாக்குச் செலுத்த இடமளிக்கும் விதத்தில் தேர்தல் சட்டத்தை வியாக்கியானம் செய்யக் கூடாது என்ற கருத்து நிலைப்பாடு தேர்தல் ஆணையக வட்டாரத்துக்குள்ளே இருப்பதாகவும் கூறப்படுகின்றது.

தற்போது எழுந்துள்ள சர்ச்சையை ஒட்டி, இலங்கையின் உயர்மட்ட நீதிமன்றத்திடம் கோட்டாபய ராஜபக்ஷ சட்ட நிவாரணம் பெறுவதற்கான வாய்ப்புகள் குறித்தும் ஆராயப்படுவதாகத் தெரிகின்றது (உ)

## விவசாய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) ளார்.

சுதந்திரக் கட்சியின் துணைத் தலைவர்களில் ஒருவரான அங்கஜன் இராமநாதனுக்குப் பிரதிச் சபாநாயகர் பதவியை வழங்க ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி முயற்சித்தது. அதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆட்சேபனை தெரிவித்தது.

இதனால் அங்கஜன் இராமநாதனைப் பிரதிச் சபாநாயகராக நியமிக்க ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அனுமதியளிக்கவில்லை.

இந்த நிலையில் அங்கஜன் இராமநாதன் விவசாயத்துறை பிரதி அமைச்சராக நேற்று நியமிக்கப்பட்டுள்ளார்.

இரண்டு புதிய இராஜாங்க அமைச்சர்களும் ஐந்து பிரதி அமைச்சர்களும் நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்து கொண்டனர்.

அவர்களின் பெயர் விவரங்கள் வருமாறு:-

**இராஜாங்க அமைச்சர்கள்**

★ ரஞ்சித் அலுவிகார – சுற்றுலா அபிவிருத்தி, கிறிஸ்தவ சமய அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

★ லகீ ஜயவர்த்தன – மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு வசதிகள், சமூக அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**பிரதி அமைச்சர்கள்**

★ அஜித் மான்னப்பெரும – சுற்றாடல் துறை பிரதி அமைச்சர்

★ அங்கஜன் இராமநாதன் – விவசாயத்துறை பிரதி அமைச்சர்

★ காதர் மஸ்தான் – மீள் குடியேற்றம், புனர்வாழ்வு, வடக்கு அபிவிருத்தி,

★ இந்து சமய அலுவல்கள் பிரதி அமைச்சர்

★ எட்வேட் குணசேகர – உள்நாட்டு அலுவல்கள், வடமேல் மாகாண அபிவிருத்தி பிரதி அமைச்சர்

★ நளின் பண்டார ஜயமஹ – பொது நிர்வாகம், முகாமைத்துவம் மற்றும் சட்டம் ஒழுங்கு பிரதி அமைச்சர். (ஐ)

## இந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) சார மற்றும் புனர்வாழ்வு பிரதி அமைச்சராக நேற்று நியமிக்கப்பட்டார்.

வடக்கு – கிழக்கு அபிவிருத்திக்கான ஜனாதிபதி செயலணியில் நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் நியமிக்கப்பட்ட நிலையில் அவருக்குப் பிரதி அமைச்சர் பதவியையும் மைத்திரிபால சிறிசேன நேற்று வழங்கினார்.

சுதந்திரக் கட்சியைப் பலப்படுத்தும் வகையிலேயே காதர் மஸ்தானுக்கு இந்தப் பதவி வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## காணி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) தொடர்பில் மாகாண சபையில் சுட்டிக்காட்டப்பட்டதை அடுத்து அவைத் தலைவர் தலைமையிலான மாகாண சபை உறுப்பினர்கள் குழு அண்மையில் முல்லைத்தீவுக்கு விஜயம் செய்து அங்கு நிலைமைகளைப் பார்வையிட்டதுடன் போராட்டமொன்றையும் நடத்தியது.

இதன் பின்னர் மாகாண சபை உறுப்பினர்களும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் சந்தித்துக் கலந்துரையாடுவதெனத் தீர்மானிக்கப்பட்டது. அந்தச் சந்திப்பும் அண்மையில் நடந்தது.

இதன்போது விசேட செயலணியொன்று அமைக்கப்பட்டது. அந்தச் செயலணி தனது நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. முல்லைத்தீவு உட்பட வடக்கில் மேற்கொள்ளப்படும் குடியேற்றங்கள் உள்ளிட்ட விடயங்கள் குறித்து ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோரின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

முன்னெடுக்கப்பட வேண்டிய தொடர் நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. – என்றார். (ஐ-7)

## இந்துக்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) தெரிவித்துள்ளார்.

ஸ்ரீகொத்தாவில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த 7 பேருக்குப் பிரதி மற்றும் இராஜாங்க அமைச்சுப் பதவிகள் வழங்கப்பட்டன.

இதில் காதர் மஸ்தானுக்கு வடக்கு அபிவிருத்தி, மீள்குடியேற்றம், இந்து கலாசார மற்றும் புனர்வாழ்வு பிரதி அமைச்சுப் பதவி வழங்கப்பட்டுள்ளது.

இங்கு முஸ்லிமொருவருக்கு எவ்வாறு, இந்து கலாசார பிரதி அமைச்சுப் பதவியை வழங்க முடியும். இந்த அமைச்சுப் பதவியை வழங்குவதற்கு நல்லாட்சியில் ஒரு இந்துவும் இல்லையா?

இந்தச் செயற்பாடு இந்துக்களைக் கொச்சைப்படுத்தும் – அவமானப்படுத்தும் செயற்பாடாக அமைந்துள்ளது. இதனை எந்தவொரு இந்துவும் அனுமதிக்க முடியாது.

இது தொடர்பில் ஜனாதிபதியும், பிரதமரும் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லாது போனால் நாட்டிலுள்ள அனைத்து இந்துக்களின் எதிர்ப்பையும் சந்திக்க நேரிடும்.

காதர் மஸ்தானும், நானும் இயல்பாகவே நல்ல நண்பர்கள். எனக்கும் அவருக்குமிடையில் எந்தவொரு பிரச்சினையும் கிடையாது.

இவ்வாறு முஸ்லிம் ஒருவருக்கு இந்து விவகாரம் தொடர்பில் ஒரு அமைச்சுப் பொறுப்பை வழங்கினால் இந்துக்கள் இந்த விடயத்தை எவ்வாறு நோக்குவர். – என்றார். (ஐ)

## தவராசா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) பணத்தை அவரிடம் மீள வழங்குவதற்காக, தாம் சேகரித்த 7000 ரூபாவுடன் நேற்று யாழ்ப்பாணத்துக்கு வந்த கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள் மூவர், அந்தப் பண முடிச்சை தவராசாவின் வீட்டு கேற்றில் கட்டித் தொங்கவிட்டு விட்டுச் சென்றனர்.

மே – 18 முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் ஏற்பாட்டுச் செலவுகளின் பொருட்டு வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் 38 பேரில் 33 பேரிடம் இருந்து தலா 7 ஆயிரம் ரூபா பெறப்பட்டிருந்தது. நினைவேந்தல் நிகழ்வை வடக்கு மாகாண சபை செய்வது என்ற அடிப்படையில் அந்த ஏற்பாடு இடம்பெற்றது.

வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் நினைவேந்தல் நிகழ்வில் புறக்கணிப்பட்டனர் என்று சுட்டிக்காட்டிய எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா, தனது பங்கான 7 ஆயிரம் ரூபா பணத்தைத் திருப்பித் தருமாறு கோரி இருந்தார்.

எனினும் உறுப்பினர்களின் பணம் முழுவதும் செலவிடப்பட்டதாகவும், அதனை மீள வழங்குவதில்லை எனவும் சபையில் தீர்மானிக்கப்பட்டது. அதனால் தனது கோரிக்கையைத் தவராசா கைவிட்டார்.

இந்த நிலையில் வடக்கு மாகாண எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசாவால் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுக்காக வழங்கப்பட்ட 7 ஆயிரம் ரூபா பணத்தை மீளக் கையளிப்பதற்காகக் கிழக்கு மாகாணத்தில் ஒரு ரூபா வீதம் 7 ஆயிரம் பேரிடம் பணம் சேகரிக்கப்பட்டது.

அந்தப் பணமே தவராசாவிடம் நேரில் கையளிக்கப்படுவதற்கு கிழக்குப் பல்கலைக்கழக மாணவர் பிரதிநிதிகளால் நேற்று யாழ்ப்பாணம் எடுத்து வரப்பட்டது.

வடக்கு மாகாண சபை அமர்வு நேற்றுக் கைதடியிலுள்ள பேரவைச் செயலகத்தில் இடம்பெற்றது. இந்த அமர்வில் பங்கேற்க வரும் எதிர்க்கட்சித் தலைவரிடம் பணத்தை வழங்க மாணவர்கள் மூவர் காத்திருந்தனர். ஆயினும் தவராசா நேற்றுச் சபைக்குச் சமூகமளிக்கவில்லை. சபை அமர்வு முடியும் வரை மாணவர்கள் அங்கு காத்திருந்தனர். ஆயினும் அது பலனளிக்கவில்லை.

அந்தப் பணத்தை முதலமைச்சர் நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் ஊடாக தவராசாவிடம் வழங்க மாணவர் பிரதிநிதிகள் முயன்றனர். எனினும் சபையில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமையத் தன்னால் அந்தப் பணத்தைப் பெற்றுக் கொள்ள முடியாது என முதலமைச்சர் மறுப்புத் தெரிவித்து விட்டார்.

இதனை அடுத்துக் கொக்குவிலில் அமைந்துள்ள தவராசாவின் வீட்டுக்குச் சென்ற மாணவர்கள், அந்தப் பண முடிச்சில் பாவப்பட்ட பணம் என எழுதி அதனை வீட்டுக் கேற்றில் கட்டித் தொங்கவிட்டுவிட்டுச் சென்றனர்.

இது தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் தவராசா பொலிஸாருக்குத் தகவல் வழங்கினார். அவர்கள் அங்கு சென்று அந்தப் பணப்பொதியை மீட்டுச் சென்றனர். (ஐ-7)

# வென்றார் வெட்டல்

கனேடியன் கிராண்ட் பிறிக்ஸில், பெராரி அணியின் ஜேர்மனிய ஓட்டுநரான செபஸ்ரியன் வெட்டல் வென்றுள்ளார்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்தப் பந்தயத்தில் முதலாவது நிலையிலிருந்து ஆரம்பித்து முதலாவது வளைவிலேயே முன்னிலையைப் பெற்ற வெட்டல், பந்தயம் முழுவதும் மெர்சிடஸ் அணியின் பின்லாந்து ஓட்டுநரான வல்ட்டேரி போத்தாஸை குறுகிய இடைவெளியில் பின்னால் கொண்டிருந்தபோதும் அவரை முந்த விடாமல் வெற்றிபெற்றார்.

அந்தவகையில், போத்தாஸ் இரண்டாமிடத்தைப் பெற்றதுடன், போத்தாஸை பந்தயத்தின் முதலிரு வளைவுகளிலும் முந்த முயன்ற றெட் புல் அணியின் நெதர்லாந்து ஓட்டுநரான மக்ஸ் வெர்ஸ்டப்பன் மூன்றாமிடத்தைப் பெற்றார்.

மெர்சிடஸ் அணியின் ஐக்கிய இராச்சிய ஓட்டுநரான லூயிஸ் ஹமில்டன் நான்காவதாக பந்தயத்தை ஆரம்பித்தபோதும் ஐந்தாமிடத்தையே பெற்றார். நடப்பு போர்மியுலா வண் சம்பியனான ஹமில்டன், இயந்திரத்தின் வெப்பநிலைகள் அதிகரித்தமை காரணமாக பந்தயத்தின் முதலாவது பகுதியில் பிரச்சினைகளை எதிர்கொண்டிருந்ததன் காரணமாகக் காரை மேலும் குளிர்விப்பதற்காக, திட்டமிடப்பட்டதற்கு முன்பதாகவே ரயர்களை மாற்ற வேண்டியிருந்தது. அந்த வகையிலேயே, றெட் புல் அணியின் ஆஸ்திரேலிய ஓட்டுநரான டானியல் றிச்சியார்டோவிடம் நான்காமிடத்தை ஹமில்டன் இழந்திருந்தார்.



இதேவேளை, பெராரி அணியின் பின்லாந்து ஓட்டுநரான கிமி றைக்கோனன் ரயர் மாற்றி வரும் போது ஹமில்டனுடன் சமமாக வந்தபோதும் அவரை முந்தவிடாமல் செய்து ஐந்தாமிடத்தை ஹமில்டன் பெற்றிருந்தார்.

இந்நிலையில், இந்த வெற்றியுடன் இவாண்டுக்கான போர்மியுலா வண் சம்பின்ஷிப் புள்ளிகள் பட்டியலில் 121 புள்ளிகளைப் பெற்றுள்ள வெட்டல் முதலிடத்துக்கு முன்னேறியுள்ளார். வெட்டலை விட ஒரு புள்ளி குறைவாக 120 புள்ளிகளைப் பெற்றுள்ள ஹமில்டன் இரண்டாமிடத்தில் காணப்படுகின்றார்.



# ஒஸ்திரியாவை வென்றது பிரேஸில்

ரஷ்யாவில், நாளை வியாழக்கிழமை ஆரம்பமாகவுள்ள உலகக் கிண்ண கால்பந்தாட்டத்தை முன்னிட்டு இடம்பெற்றுவரும் சிநேகபூர்வப் போட்டிகளின் வரிசையில், நேற்று இடம்பெற்ற ஒஸ்திரியாவுடனான போட்டியில் பிரேஸில் வென்றிருந்தது.

இப்போட்டியின் 36ஆவது நிமிடத்தில் கப்ரியல் ஜெஸூஸ் பெற்ற கோலின் மூலம் முன்னிலை பெற்ற பிரேஸில், 63ஆவது நிமிடத்தில் நெய்மர் பெற்ற கோலோடு தமது முன்னிலையை இரட்டிப்பாக்கியதோடு, அடுத்த ஆறாவது நிமிடத்தில் பிலிப் கோச்சினியோ பெற்ற கோலோடு 3:0 என்ற கோல் கணக்கில் வென்றது.

# அஸ்வினின் யுத்திகளை பிரயோகிப்பேன் – முஜீப்



நடந்து முடிந்த ஐ.பி.எல். போட்டியில் பஞ்சாப் அணியின் தலைவர் அஸ்வினிடமிருந்து நான் கற்றுக் கொண்ட யுத்திகளை இந்திய அணிக்கு எதிராக இடம்பெறவுள்ள டெஸ்ட் போட்டியின்போது பிரயோகித்து இந்திய அணிக்கு நெருக்கடி அளிப்பேன் என்று ஆப்கானிஸ்தான் அணியின் சுழற்பந்து வீச்சாளர் முஜீப் ஜத்ரன் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 14 ஆம் திகதி இந்தியா, ஆப்கானிஸ்தான் அணிகளுக்கிடையிலான ஒரே ஒரு டெஸ்ட் போட்டி பெங்களூர் சின்னசாமி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இந்திய அணியைப் போன்று துடுப்பாட்ட வரிசையில் சவால்விடுக்கும் வீரர்கள் ஆப்கான் அணியில் இடம் பெறாவிடினும் பந்து வீச்சில் இந்திய அணிக்கு நெருக்கடியை ஏற்படுத்தும் வல்லமை கொண்ட இளம் வீரர்களான ரஷித்கான், முஜீப் ஜத்ரன் உள்ளிட்டோர் உள்ளது அணிக்குப் பலம் சேர்க்கும். இதற்காக ஆப்கானிஸ்தான் அணியினர் தீவிரமாகப் பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இத் தொடர் குறித்து ஆப்கான் அணியின் சுழற்பந்து வீச்சாளர் முஜீப் கூறுகையில்,

நான் கிங்ஸ் லெவன் அணியில் இருக்கும்போது பெரும்பாலான நேரத்தை அஸ்வினுடன் செலவிட்டேன். அவர் அளித்த பல்வேறு அறிவுரைகள், பந்துவீச்சு நுணுக்கங்கள் எனக்கு மிகவும் பலம் சேர்த்தன. எந்த இடத்தில் பந்து வீசினால் துடுப்பாட்டக்காரர் தடுமாறுவார், புதிய பந்தில் எப்படி பந்து வீசுவது, பந்து தேய்ந்துவிட்டால் எப்படி சுழலவிடுவது போன்ற பல்வேறு யுத்திகளையும் அவரிடமிருந்து கற்றேன். அதற்கு நான் அவருக்கு நன்றி சொல்ல வேண்டும்.

எனினும் இந்தியாவுக்கு எதிராக இடம்பெறவுள்ள டெஸ்ட் போட்டியின்போது அஸ்வினிடமிருந்து நான் கற்றுக் கொண்ட அனைத்து நுணுக்கங்களையும் பயன்படுத்தி இந்திய அணிக்கு நெருக்கடி அளிப்பேன் – என்றார்.



அண்டர்சன்

# இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் கேலிக்கூத்தானது

இந்தியாவிற்கு எதிராக 42 நாட்களில் 5 டெஸ்ட் போட்டிகளில் விளையாடும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ள போட்டி அட்டவணை கேலிக் கூத்தானதென இங்கிலாந்து அணியின் வேகப்பந்துவீச்சாளர் ஜேம்ஸ் அண்டர்சன் தெரிவித்துள்ளார்.

இந்திய அணி இங்கிலாந்துக்கு கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொண்டு அந்த அணியுடன் மூன்று வகை கிரிக்கெட் தொடரிலும் விளையாடவுள்ளது.

இந்நிலையில் இரு அணிகளுக்குமிடையில் முதலில் இருபதுக்கு – 20 போட்டித் தொடரும், அதன்பின் ஒரு நாள் போட்டித் தொடரும், இறுதியில் டெஸ்ட் போட்டித் தொடரும் இடம்பெறவுள்ளது.

இருபதுக்கு – 20 போட்டித் தொடர் அடுத்த மாதம் 3 ஆம் திகதி ஆரம்பமாகின்றது. ஒருநாள் தொடர் ஜூலை மாதம் 12 ஆம் திகதி ஆரம்பமாகின்றது. அதன்பின் ஐந்து போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி ஆரம்பமாகின்றது.

ஐந்து டெஸ்ட் போட்டிகளும் ஆகஸ்ட் முதலாம் திகதி முதல் செப்ரெம்பர் மாதம் 11 ஆம் திகதி வரை 42 நாள்களில் இடம்பெறவுள்ளது.

இடைவெளி இல்லாமல் மிகவும் நெருக்கடியான நிலையில் போட்டி அட்டவணை தயார் செய்யப்பட்டுள்ளது. இதனால் தொடர் முழுவதும் உடல் வலிமையுடன் விளையாடுவதற்காக ஜேம்ஸ் அண்டர்சனுக்கு 6 வாரங்கள் ஓய்வு கொடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையிலேயே ஜேம்ஸ் அண்டர்சன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் ஜேம்ஸ் அண்டர்சன் மேலும் தெரிவிக்கையில்,

இந்தியாவுக்கு எதிராக 42 நாள்களில் 5 டெஸ்ட் போட்டிகளில் விளையாடும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ள போட்டி அட்டவணை கேலிக் கூத்தானது.

கடந்த இரண்டு வருடங்களாக எனது தோள்பட்டையில் காயம் இருந்து வருகிறது. என்னால் சிறந்த வழியில் அதை பார்த்துக்கொள்ள முடியும். நான் உடற்பயிற்சிக் கூடத்திற்குச் சென்ற தோள்பட்டையை வலுவாக்குவது அவசியம்.

42 நாட்களுக்குள் ஐந்து டெஸ்ட் என்பது கேலிக் கூத்தானது. இது ஏராளமான வகையில் மன அழுத்தத்தைக் கொடுக்கும். இந்த அட்டவணையால் நான் லங்காஷைர் அணிக்கான சில போட்டிகளை இழக்கும் நிலை ஏற்பட்டுள்ளது" என்றார்.

# தொலைக்காட்சி நிகழ்ச்சி தொகுப்பாளர் கைதானார்

கொழும்பு, ஜுன் 13

பிரபல தொலைக்காட்சி நிகழ்ச்சித் தொகுப்பாளர் ஒருவர் உடற்பயிற்சி நிலைய உரிமையாளர் ஒருவரைக் கத்தியால் குத்திய குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த சனிக்கிழமை இரவு 9 மணியளவில் வத்தளை –எந்தேரமுல்ல பகுதியில் வைத்து உடற்பயிற்சி நிலைய உரிமையாளரைத் தனிப்பட்ட பகை காரணமாக தொலைக்காட்சி நிகழ்ச்சித் தொகுப்பாளர் கத்தியால் சரமாரியாகக் குத்தியுள்ளார்.

கத்திக்குத்திற்கு இலக்கானவர் கடவத்தையைச் சேர்ந்த 35 வயதானவராவார். இவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார் எனக் கடவத்தைப் பொலிஸார் தெரிவித்தனர்.

தொலைக்காட்சி நிகழ்ச்சித் தொகுப்பாளரையும் கத்திக் குத்துக்கு உதவி புரிந்த குற்றச்சாட்டின் பேரில் அவரது இரு பிள்ளைகளையும் கடவத்தைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட மூவரிடமும் ஆரம்பகட்ட விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டதையடுத்து நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ஐ)

# தமிழர் தாயக ஆக்கிரமிப்பை தடுக்க ஒன்றிணையவேண்டும்

## வடமாகாண சபை உறுப்பினர் குகதாஸ் கோரிக்கை

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஜுன் 13

தமிழர் தாயகப் பகுதியில் 2009 ஆம் ஆண்டுக்கு முன்னர் பாதுகாக்கப்பட்ட இந்த மண் 2009 ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஆக்கிரமிக்கப்பட்டும் அபகரிக்கப்பட்டும், சூறையாடப்பட்டும் வருகின்றது. இவ்வாறான நிலைமைகள் எமது சமூகத்துக்குப் பலத்த பாதிப்புக்களையே ஏற்படுத்தும். ஆகவே இதனைத் தடுத்து நிறுத்தும் நடவடிக்கைளைகளை ஒன்றிணைந்து மேற்கொள்ள வேண்டியது அவசியம்.

இவ்வாறு வடக்கு மாகாண சபையின் உறுப்பினர் சபா குகதாஸ் கோரிக்கை விடுத்தார்.

நேற்று இடம்பெற்ற சபை அமர்வில் பங்கேற்று உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கோரினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

வடக்கு மாகாணத்தில் கடந்த 2009 ஆம் ஆண்டுக்கு முன்னர் நிலமும், வளமும் பாதுகாக்கப்பட்டே வந்தது. ஆனால் 2009 ஆம் ஆண்டுக்கு பின்னர் அது மிக வேகமாக ஆக்கிரமிக்கப்பட்டும் சுரண்டப்பட்டும் வருகின்றது. இதிலும் குறிப்பாக இந்த நாட்டின் சுற்றுச் சூழல் அமைச்சராக இருக்கின்ற ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சொல்லுக்குச் சொல் வரிக்கு வரி சுற்றுச் சூழல் பாதுகாப்பு தொடர்பில் பேசி வருகின்றார்.

ஆனால் அதற்கு மாறாக வடக்கில் திட்டமிட்டு வளங்கள் சூறையாடப்பட்டு வருகின்றன. சுற்றுச் சூழலும் பாதிக்கப்பட்டு வருகின்றது. இவை எல்லாம் திட்டமிட்ட வகையிலே செயற்படுத்தப்பட்டு வருகின்றன. இந்த நிலைமைகள் தொடர்ந்தால் வடக்கு மாகாணம் விரைவில் பாலைவனமாக மாறும் நிலையே ஏற்படும். எனவே இந்த நிலைமைகள் ஏற்படாத வகையில் வளங்களைப் பாதுகாக்கின்ற அனைத்து நடவடிக்கைகளையும் நாம் அனைவரும் இணைந்து முன்னெடுக்க வேண்டும் – என்றார். (ஐ-7)

# மக்களிடம் கொள்ளையிட்டோர் இப்போது நல்லவராகிவிட்டனர்

## கூறுகிறார் ஹரின் பெர்னான்டோ

கொழும்பு, ஜுன் 13

அர்ஜுன் அலோசியஸிடம் இருந்து காசு எடுத்தவர்கள் கெட்டவர்களாகவும், நாட்டுமக்களிடம் இருந்து காசை கொள்ளையடித்தவர்கள் நல்லவர்களாகவும் மாறிவிட்டார்கள். தற்போது இந்த நாட்டின் நிலை இதுதான் எனத் தொலைத்தொடர்பு டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் வெளிநாட்டு தொழில் வாய்ப்பு அமைச்சர் ஹரின் பெர்னான்டோ தெரிவித்தார்.

ஸ்ரீகொத்தாவில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தமது சட்டைப்பையிலிருந்து காசு எடுத்தவர்களை மறந்துவிட்டு, யார் அந்த 118 பேர் என்பதையே மக்கள் தேடுகின்றனர். ஊடகவியலாளர்களும் இதை மறந்துவிட்டார்கள்.

அண்மையில் விசுவமடு இராணுவமுகாமிலிருந்து இடமாற்றம் பெற்றுச் சென்ற இராணுவ கேணல் ரத்னபிரிய பந்துவுக்கு அப்பகுதி மக்கள் கண்ணீருடன் பிரியா விடை கொடுத்ததற்குக் காரணம் என்ன?

இந்தக் கௌரவத்தை அவருக்குக் கொடுக்க அன்புதான் காரணம். இராணுவம் என்பது அடிப்பதற்கும், கொடுமைப் படுத்துவதற்கும் இல்லை. அவர் மக்கள் மனதில் இடம்பிடித்த விதமே இங்கு முக்கியமானது.

மனிதன் மனிதனுடன் பழகும் விதம் இருக்கின்றது. அந்த மக்களின் மனதை வெல்லும் திறன் இருக்கின்றது.

இன்று அனைவராலும் ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் எதிராகக் கருத்துக்களை முன்வைக்க முடியும். பிரதமர் ஜனாதிபதியை விமர்சிக்கலாம். அதேபோல் ஜனாதிபதி பிரதமரை விமர்சிக்கலாம். நாமும் அவர்களை விமர்சிக்கலாம். ஆனால் இதன்மூலம் இந்த அரசு பிரிந்துவிட்டது, இந்த அரசுக்குப் பலம் இல்லை என குறிப்பிட முடியாது – என்றார். (ஐ)

# யூரோ 4 எரிபொருள் ஜுலையில் வருகிறது

கொழும்பு, ஜுன் 13

இலங்கை எரிபொருள் சந்தையில் அடுத்த மாதம் தொடக்கும் யூரோ 4 எரிபொருள் அறிமுகப்படுத்தப்படுவதாகப் பெற்றோலிய வளங்கள் அமைச்சு அறிவித்துள்ளது.

சுப்பர் டீசல் மற்றும் 95 ஒக்ரைன் பெற்றோல் ஆகியவற்றுக்குப் பதிலாகவே யூரோ 4 எரிபொருள் அறிமுகப்படுத்தப்படுவதாக அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

சுற்றுச் சூழலுக்கு உகந்தது எனக் கருதப்படும் யூரோ 4 எரிபொருளை இலங்கையிலும் பாவனைக்குக் கொண்டுவர இலங்கை அரசு கடந்த டிசெம்பர் மாதம் முதல் நடவடிக்கைகளை எடுத்திருந்தது.

இந்த நிலையில் எதிர்வரும் ஜுலை முதல் அதனை அறிமுகப்படுத்த உள்ளதாக பெற்றோலிய வளங்கள் அமைச்சு நேற்று அறிவித்துள்ளது. (ஐ)






இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள நியூ சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.06.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.